## ஸத்திய தரிசனம்.

## மகாத்மா காந்தியின் ஜீவிய சரித்திரம்.

### 3-ம் பிரிவு-13-வது அத்தியாயம்.

மகாத்மாகாந்தி "நவஜீவன்" பத்திரிகையில் தொடர்ச்சியாக எழுதிவரும் தமது ஜீவிய சரிதை பின் வருமாறு:-

நான் சுதேசத்திற்குத் திரும்பினேன். வரும் வழியில் மொரிஷஸ் தீவுகளில் கப்பல் அதிக காலம் தங்கியிருந்ததால் நான் கீழே இறங்கிச்சென்று, அவ்விடத்து நிலைமையைத் தெரிந்துகொண்டேன். ஒருநாள் இராத்திரி அந்த தீவுகளின் கவர்னர் ஸர். சார்லஸ் புரூஸின் விருந்தினராக நான் இருந்தேன்.

இந்தியாவிற்கு நான் திரும்பிவந்ததும் சிறிது காலத்தை நாடெங்கும் சுற்றுப் பிரயாணம் செய்வதில் கழித்தேன். நான் திரும்பிவந்தது 1901-ம் வருஷத்தில். அந்த வருஷத்தில் கல்கத்தாவில் ஸ்ரீமான் வாச்சாவின் அக்கிராசனத்தின் கீழ் காங்கிரஸ் மகாசபைகூடியது. நானும் அதற்குச் சென்றிருந்தேன். நான் காங்கிரஸுக்கு முதன் முதலாக அப்பொழுதுதான் சென்றேன். பம்பாயிலிருந்து ஸர். பிரோஸிஷா மேத்தா பிரயாணம் செய்த வண்டியிலேயே நானும் சென்றேன். தென்னாப்பிரிக்காவின் நிலைமையைப்பற்றி அவருடன் நான் பேசவேண்டியிருந்தது. அவர் ஒரு தனி வண்டி ஏற்பாடு செய்துகொண்டிருந்தார். அந்த சந்தர்ப்பத்தில் அவரிடத்தில் நான் தெரிவித்துக் கொள்ள வேண்டியதைச் சொல்லிக்கொள்ளும்படி எனக்குக் கட்டளையிடப்பட்டிருந்தது. அதைப்படி குறிப்பிட்ட இடத்தில் நான் அந்த வண்டியில்போய் ஏறிக்கொண்டு, நான் வந்திருக்கும் விவரத்தைத் தெரிவித்துக்கொண்டேன். அதே வண்டியில் ஸர். டின்ஷாவாச்சா, ஸர் சிமன்லால் செதல்வாடு இவர்களுமிருந்தனர். அவர்கள் ராஜீய விஷயங்களைப்பற்றி விவாதித்துக் கொண்டிருந்தனர். ஸர். பிரோஸிஷா என்னைப்பார்த்ததும், "காந்தி, உங்களுக்காக ஒன்றும் செய்யமுடியாது போலிருக்கிறது. இருந்தாலும் நீங்கள் சொல்லுகிறபடி தீர்மானம் செய்கிறோம். ஆனாலும் நம்முடைய தேசத்திலேயே நமக்கு என்ன உரிமையிருக்கிறது? நம்முடைய தேசத்திலேயே நமக்கு அதிகாரமில்லாமலிருக்கும் பொழுது, குடியேற்ற நாடுகளில் நாம் சௌகரியமான நிலைமையை அதிர்பார்ப்பதற்கில்லை" என்று அவர் சொன்னார். நான் திடுக்கிட்டுப் போனேன். ஸர். சிமன்லாலும் இந்த அபிப்பிராயத்தை ஆதரித்தார். ஸர். டின்ஷா இரக்கத்துடன் என்னைப் பார்த்தார்.

ஸர். பிரோஸிஷாவிடம் சமாதானம் சொல்லிப்பார்க்க முயற்சி செய்தேன். ஆனால் பம்பாய் முடிசூடா மன்னனுடைய மனதைத் திருப்புவது என் போன்றோர்களுக்கு சாத்தியமானதன்று. அந்தத்தீர்மானத்தை நானே பிரேரணைசெய்ய அனுமதி கிடைத்ததில் நான் திருப்தியடைந்தேன்.

என்னைக் குஷிப்படுத்துவதற்காகத் "தீர்மானத்தை என்னிடம் காட்டுங்கள்" என்று ஸர். டின்ஷாவாச்சா சொன்னார். அவருக்கு வந்தனம் செலுத்திவிட்டு வண்டி நின்ற அடுத்த ஸ்டேஷனில் இறங்கி என்னுடைய இடத்திற்குப் போய்விட்டேன்.

நாங்கள் கல்கத்தா போய்ச் சேர்ந்தோம். உபசாரணை சபையினர் பிரஸிடெண்டை மிகுந்த உற்சாகத்தினிடையே ஊர்வலமாக அவருக்கென ஏற்படுத்தியிருந்த ஜாகைக்கு அழைத்துச் சென்றார்கள். நான் எங்கே செல்வதென்று ஒரு தொண்டரைக்கேட்டேன். பல பிரதிநிதிகள் இறங்கியிருந்த ரிப்பன் கலாசாலைக்கு அவர் என்னை அழைத்துப்போனார். எனக்கு அதிஷ்டம் திரும்பியது. அதே இடத்தில் லோகமான்ய திலகரும் இறங்கினார். அவர் மறுநாள் வந்ததாக எனக்கு ஞாபகம்.

வழக்கம்போல் லோகமான்யர் தர்பாரில்லாமல் இருக்கமுடியாது. நான் சித்திரம் வரையக்கற்றுக்கொண்டிருந்தால படுக்கையில் அவர் உட்கார்ந்துகொண்டிருந்த பெருமை வெளிப்படும்படி அவருடைய படத்தை நான் எழுதியிருப்பேன். அது அப்படியே என் மனதில் பதிந்திருக்கிறது. அவரைப் பார்க்க வந்த எண்ணற்றவர்களில் அமிர்தபஜார் பத்திரிகையின் ஆசிரியர் பாபுமோதிலால் கோஷின் பெயர்தான் எனக்கு ஞாபகமிருக்கிறது. அவர்கள் உரக்கச் சிரித்ததும், ஆளும் ஜாதியினருடைய அக்கிரமங்களைப் பற்றி அவர்கள் பேசிக்கொண்டதும் மறந்து போகக்கூடியவைகளன்று.

இந்த முகாமில் நடந்துகொண்டிருந்த சம்பவங்களைச் சிறிது விஸ்தாரமாக விவரிக்க விரும்புகிறேன். தொண்டர்களுக்குள் அன்யோன்ய பாவமிருந்த வரவில்லை. ஒருவருக்கு ஒரு வேலையிட்டால் அதை அவர் இன்னொருவருக்கு இடுவார். அவர் மற்றொருவருக்குச் சொல்லுவார். பிரதிநிதிகளின் சௌகரியத்தை வெரும் கவனிக்கவில்லை.

நான் சில தொண்டர்களுடன் சிநேகம் செய்துகொண்டேன். தென்னாப்பிரிக்காவைப்பற்றிய சில விஷயங்களை அவர்களுக்குச் சொன்னேன். அவர்கள் அவமானமடைந்தார்கள்; ஊழியத்தின் விசேஷத்தை அவர்களுக்கு எடுத்துச்சொன்னேன். அதன் மகிமையை அவர்கள் உணர்ந்துகொண்டார்கள் இருந்தாலும் அந்த சுபாவம் ஒருநாளில் ஏற்பட்டுவிடமுடியாது. முதலில் மனம் இருக்கவேண்டும். அடுத்தபடியாக அனுபவம் வேண்டும். அந்த சிறுவர்களுக்கு மனம் இல்லாமலிருக்கவில்லை. அனுபவம் மாத்திரம் பூஜ்யமாக இருந்தது. காங்கிரஸ் வருஷத்தில் மூன்றுநாள் கூடிவிட்டு மறுபடியும் உறக்கத்தில் விழுந்து விடுகிறது. வருஷத்தில் மூன்று தினங்களுக்குள் எவ்விதப் பயிற்சி ஏற்பட்டுவிடமுடியும்? பிரதிநிதிகளும் தொண்டர்களைப்போன்றே யிருந்தார்கள். அவர்களுக்கும் பயிற்சி ஏற்படவில்லை. அவர்கள் சுதாவாக எதையும் செய்வதில்லை. தொண்டரே, இதைச்செய்யுங்கள்; தொண்டரே அதைச் செய்யுங்கள் என்றே அவர்கள் சொல்லிக் கொண்டிருந்தார்கள்.

இங்கும் தீண்டாமை ஓரளவு காணப்பட்டது. தமிழ்நாட்டினரின் சமையலறையானது மற்ற சமையலறைகளுக்கு வெகு தொலையிலிருந்தது. தமிழ் நாட்டினர் திருஷ்டி தோஷமும் கொண்டாடினார்கள். அதனால் கலாசாலை காம்பவுண்டில் தனியாக அவர்களுக்கு அறை ஏற்படுத்தி அதற்கு மறைப்புக்கட்ட வேண்டியிருந்தது. அது மனிதர்கள் திணறிப்போய் விடும்படி செய்யக்கூடிய அளவு புகை சூழ்ந்ததாகவிருந்தது. சமையலறை, சாப்பிடும் இடம், கை கால்களை சுத்தம் செய்துகொள்ளும் இடம் எல்லாம் ஒன்றாக இருந்தன. ஜலம் வெளியே போவதற்கு இடமில்லை. இது வர்ணாச்சிரம தர்மத்தைத் திரித்து அனுஷ்டிப்பதாகுமென்றே நான் நினைத்தேன். காங்கிரஸுக்கு வந்திருக்கும் பிரதிநிதிகளுக்குள்ளேயே இவ்விதம் தீண்டாமையிருந்து வருகையில் ஜனசமூகத்தில் அது அதிகமாக இருந்து வருவதில் என்ன அதிசயமிருக்கிறதென்று நான் சொல்லிக்கொள்வதுண்டு.

சுகாதாரக் குறைவிற்கு எல்லையேயில்லை எங்கு பார்த்தாலும் ஜலம் தேங்கியிருந்தது. கக்கூஸ்கள் குறைவாகவிருந்தன. அவைகளின் நாற்றம் இன்னமும் என்னைப் பாதிக்கிறது. நான் தொண்டர்களிடம் இதைப்பற்றிச் சொன்னேன். "இது எங்களுடைய வேலையல்ல; தோட்டிகளுடைய வேலை" யென்று அவர்கள் பட்டவர்த்தனமாக பதில் சொல்லி விட்டார்கள். நான் ஒரு வாருகோலைக் கொடுக்கும்படி கேட்டேன். அவ்விதம் நான் யாரைக் கேட்டேனோ அவர் என்னை விழித்துப்பார்த்தார். நான் ஒரு வாருகோலை சம்பாதித்து கக்கூஸை சுத்தம் செய்தேன். எனக்கு வேண்டிய இடத்தை அவ்விதம் சுத்தம் செய்துகொண்டேன். ஜனங்கள் அதிகமாக வந்ததாலும், கக்கூஸ்கள் குறைவாக இருந்ததாலும் அடிக்கடி சுத்தம் செய்யவேண்டியிருந்தது. அவ்வளவு என்னால் செய்யமுடியவில்லை. ஆகையால் என்னுடைய காரியத்தை மாத்திரம் கவனித்துக்கொண்டு திருப்தியடைய வேண்டியிருந்தது. மற்றவர்கள் துர்நாற்றத்தை லக்ஷியம் செய்யவில்லை.

இம்மட்டா? சிலர் இராத்திரியில் படுக்கை அறைத் தாழ்வாரங்களையும் கக்கூஸ்களாக உபயோகப்படுத்திக் கொள்ள ஆரம்பித்துவிட்டார்கள். மறுநாள் காலையில் தொண்டர்களுக்கு அந்த இடங்களைக் காட்டினேன். அதைச் சுத்தம் செய்ய எவருக்கும் இஷ்டமில்லை. என்னோடு சேர்ந்துகொண்டு அந்த வேலையைச் செய்யவும் எவரும் முன்வரவில்லை. இப்பொழுது நிலைமை வெகுவாக மாறுதலடைந்திருக்கிறது. இருந்தாலும் கண்ட இடத்தில் அசுத்தம் செய்கிற அசடர்கள் சிலர் இப்பொழுதும் இல்லாது போகவில்லை. எல்லாத் தொண்டர்களும் அதைச் சுத்தம் செய்ய இஷ்டப்படுவதில்லை.

காங்கிரஸ் அதிக காலம் நடந்தால் தொத்துவியாதி உண்டாகி விடுமென்று நான் கண்டு கொண்டேன்.

---

## சர்க்காவின் விசேஷம்

### ராஜேந்திர பாபுவின் அபிப்பிராயம்.

(முன் தொடர்ச்சி.)

### சர்க்கா காமதேனுவே.

இந்தக் கஷ்டத்தை சர்க்கா நிவர்த்தி செய்யக் கூடியதாக இருக்கிறது. சர்க்காவின் மகிமையை கிராமாந்தரங்களுக்குச் சென்று பார்த்தால் தெரிந்துகொள்ளலாம். கிராமாந்தரங்களில் பெருவாரியாக ஜனங்களும் ஸ்திரீகளும் வேலையில்லாமல் வீண் பேச்சில் பொழுதுபோக்கி வருகிறார்கள். அவர்களுடைய சோம்பேறித் தனத்தைச் சர்க்காவானது நிவர்த்திசெய்யக் கூடும். இரண்டாவதாக லட்சக்கணக்கான ஜனங்கள் ஒருவேளை ஆகாரத்திற்கும் வழியில்லாமல் தவிக்கின்றனர். சர்க்காவால் அதிக வருமானம் கிடைக்காவிடினும் அதில் கிடைக்கும் தொகையை இதர வருமானத்துடன் சேர்த்துக் கொண்டால் அவர்கள் வயிறாரச் சாப்பிடலாம். மூன்றாவதாக இயந்திரங்களை வாங்குவதற்காக நமது நாட்டுச் செல்வத்தை இதர தேசங்களுக்குக் கொட்டிக் கொடுக்காமல் நமது முக்கியமான தேவைகளிலொன்றை இதன் மூலமாகப் பூர்த்தி செய்து கொள்ளலாம். ஒரு தொழிற்சாலையை ஏற்படுத்துவதற்காக எடுத்து வைக்கும் முதலில் பாதித் தொகையை இயந்திரங்களுக்காக அன்னிய நாடுகளுக்குக் கொட்டிக் கொடுத்துவிட வேண்டியிருக்கிறது. பாக்கித் தொகையில் பெரும்பாகமும் பல வழிகளில் அன்னிய நாடுகளுக்குப் போய் விடுகிறது.

### நமது தேவையைக் கைத்தறி பூர்த்தி செய்விக்குமா?

சிறிது காலம் முன் வரையில் கைத்தறிகளைக் கொண்டு நமது தேவைகளைப் பூர்த்தி செய்துகொண்டதுடன் பிறதேசங்களுக்கும் நம் வஸ்திரங்களை அனுப்பி வந்திருப்பதால் சர்க்காவினாலும், கைத்தறியினாலும் நமது தேவையைப் பூர்த்தி செய்து கொண்டுவிட முடியுமாவென்ற சந்தேகம் ஏற்படவே இடமில்லை. குணத்திலும், விலையிலும் இயந்திரங்களின் மூலமாகச் செய்த துணிகளுடன் இவை போட்டிபோட முடியுமா வென்பதே கவனிக்கவேண்டிய விஷயம். கைத்தறி இவ்விதம் போட்டிபோட முடியுமா வென்பதை எல்லோரும் ஒப்புக்கொள்ளுகின்றனர். பீஹார் மாகாணத்தில் மட்டில் 5 கோடி ரூபாய் பெறுமானமுள்ள வஸ்திரங்கள் கைத்தறிகளில் உற்பத்தி செய்யப்படுவதைக் கவர்ன்மெண்டாரே ஒப்புக்கொண்டிருக்கின்றனர். இந்தியாவின் தேவையில் மூன்றில் ஒருபாகம் கைத்தறிகளிலேயே உற்பத்தி செய்யப்படுகிறதென்பதும் ஒப்புக்கொள்ளப்படுகிறது.

### நூல் நூற்றல்.

இவ்விஷயத்தில் சிறிது கஷ்டமிருப்பதை ஒப்புக்கொண்டு தானாகவேண்டும். ஆனால் ஆலையிலுள்ள கதரைப்போல் ராட்டினத்தில் நூற்க முடியுமாவென்று கவனிப்பது பொருந்தாது. இந்தியாவின் தேவையைப் பூர்த்திசெய்து வைப்பதற்கு வேண்டிய வஸ்திரங்களை நெய்வதற்கு அவசியமான நூலை நூற்பதற்கு வேண்டியவர்கள் இந்த நாட்டில் இருக்கிறார்களா வென்பதையே கவனிக்கவேண்டும். பெயர் வழிகளுக்கு இங்கு குறைவில்லை. சொற்ப கூலியத்திற்காக அவர்கள் இதில் ஈடுபட முடியுமா வென்பதே கவனிக்க வேண்டிய விஷயம். ஆனால் வேறுவேலைகளை அவர் செய்யமுடிவதாக இருந்தாலன்றோ இந்தப் பிரச்சினை கிளம்பக்கூடும். அதிக வருமானம் சம்பாதிக்கக் கூடியவர்கள் நூல் நூற்க வேண்டுமென்று ஒருவரும் சொல்லவில்லை. வேறு வேலையில்லாமலும், ஜீவனத்திற்குக் கொஞ்சம் சம்பாதிக்க வேண்டிய நிலைமையிலுமிருப்பவர்கள் நூல் நூற்றால் போதுமானது. வேறுவேலையிலிருப்பவர்களும் ஒழிந்த வேளைகளில் நூற்கலாம். அவர்கள் வருவாயைக் கவனிக்க வேண்டியதில்லை. நூல் நூற்பதற்கு வேண்டியவர்கள் இந்நாட்டிலிருக்கிறார்களென்று சென்ற 3,4 வருஷ அனுபவத்தில் தெரிந்துவிட்டது. அவர்களுக்கு ஆதரவு இல்லாததே பெரிய குறையாக இருக்கிறது. ஆதரவு இல்லாததற்கு நல்ல ரகம் கிடைக்காததே காரணம். ஆனால் நல்ல ரகத்தையும் உற்பத்தி செய்யக் கூடுமென்பது இப்பொழுது தெரிந்துவிட்டது. செத்துப்போன தொழிலை ஆரம்பிக்கத்தான முயற்சி செய்கிறோம். கடுமையான போட்டியை அது எதிர்த்து நிற்கவேண்டியிருக்கிறது. மில் தொழிலுக்குள்ள ஆதரவும், முயற்சியும் இதற்கில்லாமலிருக்கிறது; இருந்தாலும் சர்க்கா ஓங்கிவருகிறது. மில் துணிக்கும் கதர் துணிக்கும் விலை வித்தியாசம் குறைந்து வருகிறது. இன்னும் ஏற்பாடாக வேலை செய்தால் விலை வித்தியாசம் இன்னும் குறையக் கூடும்.

### கதர் தொழிலை ஆதரியுங்கள்.

தற்காலிகமாக அதிக விலைகொடுக்க வேண்டியிருந்தாலும் கதருக்கு கிராக்கியை உண்டுபண்ண வேண்டும். எந்தத் தொழிலிலும் ஆதரவில்லாமல் இந்தக் காலத்தில் வளர்த்தியில்லை. எந்தத் தொழிலை பாதுகாப்பில்லாமல் தலையெடுக்க முடியாமலிருக்கையில் கதருக்குச் சிறிது அதிகவிலை கேட்பதற்காக ஆயாசப்படலாமா? இந்தத் தொழிலை முன்னுக்குக் கொண்டுவர இந்தியாவிற்கு அதிகாரமிருந்தால் சீமைத் துணிகளமீது இந்தியா இறக்குமதிவரியை விதித்துவிடும். அதற்கு இப்பொழுது சுதந்திரமில்லாவிடினும் சிறிது அதிகவிலை கொடுத்தேனும் இந்தத் தொழிலை முன்னுக்குக் கொண்டுவருவதென்று ஜனங்கள் கங்கணம் கட்டிக்கொண்டுவிட்டால் சுலபமாக இது சாத்தியமாகிவிடும்.

---


நாடார் மஹாஜன சங்கம்,
மதுரை.

## தேவை.

சங்கத்தின் நோக்கங்களை கிராமங்கள் தோறும் சென்று பரவச்செய்வதற்காக 3 பிரசாரகர்கள் தேவை. பிரசங்கம் செய்வதில் திறமை வாய்ந்தவர்களாக இருக்கவேண்டும். ஆங்கிலப்பயிற்சி உள்ளவர்களாக இருந்தால் மிகவும் நல்லது. திறமைக்குத் தகுந்த சம்பளம் கொடுக்கப்படும். 15-4-27 க்குள் யோக்கியதா பத்திரங்களுடன் காரியதரிசிகளுக்கு விண்ணப்பங்கள் அனுப்பவேண்டும்.

காரியதரிசிகள்,
நாடார் மஹாஜன சங்கம்,
221. கீழமாட்டு வீதி,
மதுரை.


Tamil Heritage Foundation International Digital Library EBook collection

## நாடார் மஹாஜன சங்கம், மதுரை.

### கௌன்ஸில் கூட்டத்தீர்மானங்கள்.

1927 ௵ மார்ச்சு மீ௳ 12 ௨ சனிக்கிழமை மாலை 6-மணிக்கு சங்கம் ஹாலில் நடைபெற்ற கௌன்ஸில் கூட்டத்தின் நடவடிக்கைகள்.

மதுரை ஸ்ரீமான் ப. ரா. முத்துச்சாமி நாடாரவர்களால் பிரேரிக்கப்பெற்று விருதுநகர் ஸ்ரீமான் அ. சு. சொ. சு. சங்கரபாண்டிய நாடாரவர்களால் ஆமோதிக்கப்பெற்று அருப்புக்கோட்டை "நாடார்குல மித்திரன்" உபபத்திராதிபர் ஸ்ரீமான் சொ. ஆ. சொக்கலிங்கபாண்டிய நாடாரவர்கள் அக்கிராசனம் வகித்தார்கள்.

அடியிற்கண்ட மெம்பர்கள் ஆஜராயிருந்தனர்:—ஸ்ரீமான்களான மதுரை பா. ம. பாண்டியநாடார், ஆ. அ. ஆறுமுகநாடார், வ. அ. ஏமநாடார், வா. கருப்பணநாடார், ஏ. பொன்னையா நாடார் மா. நீ. பொன்னையாநாடார், மு. சுடலைமுத்து நாடார், பெ. அ. பெரியசாமிநாடார், மா. வேலுநாடார், ப. ரா. முத்துச்சாமி நாடார், வா. அ. புன்னையப்பநாடார், அரி. அ. சு. துரைச்சாமிநாடார்—தூத்துக்குடி, அ. சு. சொ. சு. சங்கரபாண்டிய நாடார், விருதுநகர்—கே. எஸ். பழனிக்குமாரு நாடார்—பாலையம்பட்டி, சொ. ஆ. சொக்கலிங்கபாண்டிய நாடார்—அருப்புக்கோட்டை, அ. ரா. ப. அரசப்பநாடார்—நாரையூரணி, மூ. வடிவேல்நாடார்—சமையநல்லூர்.

1. 1926 ௵ டிசம்பர் மீ௳ 31௨ யோடு முடிந்த மூன்று மாதத்திய வேலைகளையும், வரவு செலவு கணக்குகளையும் பற்றிய ரிப்போர்ட்டு காரியதரிசி ஸ்ரீமான் ஆ. அ. ஆறுமுகநாடாரவர்களால் வாசிக்கப் பெற்று ஏகமனதாய் ஒப்புக்கொள்ளப்பெற்றது.

2. 12-2-27-ல் கூடிய ஸ்பெஷல் ஜெனரல் மீட்டிங்கு சட்டப்படி செல்லுபடியாகாதென்றும் அதில் நிறைவேறிய தீர்மானங்களை அடுத்துக் கூடும் வருடாந்திர ஜெனரல் மீட்டிங்குவரை அமுலுக்குக் கொண்டுவரக்கூடாதென்றும் தூத்துக்குடி ஸ்ரீமான் அரி. அ. சு. துரைச்சாமிநாடாரவர்கள் ஒரு தீர்மானம் கொண்டுவந்து பிரேரித்தார்கள். அத்தீர்மானத்தை ஆமோதிக்க ஒருவரும் முன் வரவில்லையானதால் ஷை தீர்மானம் நழுவவிடப்பட்டது.

3 (ஏ) 12-2-27ல் மதுரையில் கூடிய ஸ்பெஷல் ஜெனரல் மீட்டிங்கின் தீர்மானப்படி மதுரை டவுனில் கட்டடங்கள் வாங்குவதற்காக அடியிற்கண்ட ஆறு கனவான்களை இக்கௌன்ஸில் கமிட்டியாக நியமிக்கிறது.

#### கமிட்டி மெம்பர்கள்.

மதுரை 1. வா. அ. புன்னையப்பநாடார் 2. ஏ. பொன்னையாநாடார் 3. மா. நீ. பொன்னையா நாடார் 4. மா. வே. பழனிச்சாமி நாடார் 5. பா. ம. பாண்டியநாடார் 6. ஆ. அ. ஆறுமுக நாடார்.

(பி.) அவர்கள் கட்டடங்கள் பார்த்து கௌன்ஸிலுக்குச் செய்யும் ரிப்போர்ட்டின்மேல் கௌன்ஸிலின் அனுமதி பெற்று சொத்து வாங்க வேண்டுமென்று இக்கௌன்ஸில் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறதென்று விருதுநகர் ஸ்ரீமான் அ. சு. சொ. சு. சங்கரபாண்டியநாடாரவர்கள் பிரேரிக்க பாலையம்பட்டி ஸ்ரீமான் கு. செ. பழனிக்குமாரு நாடாரவர்களால் ஆமோதிக்கப்பெற்று ஓட்டுக்கு விடப்பெற்றதில் 6 பேர்கள் சாதகமாகவும் 2 பேர்கள் பாதகமாகவும் ஓட்டுக்கொடுத்தார்கள். மெஜாரட்டியார் ஓட்டுப்படி தீர்மானம் நிறைவேறியது.

4. (ஏ) 1927 ௵ ஏப்பிரல் மீ௳ 1௨ முதல் 1928 ௵ மார்ச்சு மீ௳ 31௨ முடியவுள்ள ஒரு வருடத்திற்கு மூன்று பிரசாரர்களை நியமித்து சங்கத்திற்கு அங்கத்தினர்களையும் கிளைச்சபைகளையும் சேர்க்க வேண்டுமென்று கௌன்ஸில் தீர்மானிக்கிறது.

(பி.) அத்தோடு தலைவர்களும் கிராமங்கோறும் சுற்றுப் பிரயாணம் செய்து சங்கத்தின் நோக்கங்களைப் பரவச்செய்ய வேண்டுமென்று இக்கௌன்ஸில் கேட்டுக்கொள்கிறது.

5 நம்மவர்கள் வசிக்கும் முக்கியமான நகரங்களில் வசூலாகாதிருக்கும் தலைக்கட்டுவரியை சங்கத்தின் பிரஸிடெண்டுகளும், காரியதரிசிகளும் சுற்றுப்பிரயாணம் செய்து தீவிரமாக வசூல்செய்வதென இக்கௌன்ஸில் தீர்மானிப்பதோடு சுற்றுப்பிரயாண காலத்தில் தங்களுக்கு உதவியாக அவர்கள் யுக்தம்போல் அபிமானிகளை கூட்டிக்கொள்ளவும் இக்கௌன்ஸில் அதிகாரம் கொடுக்கிறது.

6. திருநெல்வேலி ஸ்ரீமான் அரி. அ. செண்பகநாடார் அவர்களிடமிருந்து தேவஸ்தான கமிட்டி எலெக்ஷன் விஷயமாய் வந்த கடிதம் வாசிக்கப்பெற்று சமீபத்தில் நடைபெறவிருக்கும் இந்துமத தேவஸ்தான கமிட்டி எலெக்ஷனைக் குறித்து பத்திரிகை வாயிலாயும், சர்க்குலர் மூலமாகவும் பொது ஜனங்களுக்குத் தெரிவிக்கவேண்டுமென்று கௌன்ஸில் தீர்மானிக்கிறது.

6. 11-வது கான்பரன்ஸை பல முக்கியஸ்தர்களைக் கலந்து நடத்துவதற்குரிய ஏற்பாடுகளைச் செய்ய காரியதரிசிகளுக்கு இக்கௌன்ஸில் அனுமதி அளிக்கிறது.

8. விருதுநகர் ஸ்ரீமான் க. பெ. சங்கரலிங்கநாடாரவர்களால் ஜெனரல் மீட்டிங்குக்குக் கொண்டுவரப்பெற்று கௌன்ஸிலுக்கு அனுப்பப்பட்ட தீர்மானம் வாசிக்கப் பெற்று தேவஸ்தான மசோதாவால் நாடார்களின் சொந்த தேவஸ்தானங்களுக்கு ஏற்படும் சாதக பாதகங்களை அறிவிக்கும்படி சிவகாசி ஸ்ரீமான் மொ. சி. ஆ. சிதம்பர நாடாரவர்கள், சிவகாசி ஸ்ரீமான் பி. கே. எஸ். ஆறுமுகநாடாரவர்கள், பட்டிவீரன்பட்டி ஸ்ரீமான் ஊ. பு. அ. சௌந்தரபாண்டிய நாடார் யம். யல். சி. ஆகிய இவர்களை இக்கௌன்ஸில் கேட்டுக் கொள்கிறதென்று தீர்மானிக்கலாயிற்று.

9. மங்காபுரம் ஸ்ரீமான் பி. பெரியகாயக நாடாரவர்களிடமிருந்து நம்மவர்கள் வசிக்கும் கிராமங்களில் ஐக்கிய நாணயச் சங்கங்கள் ஏற்படுத்தும்படி வந்த கடிதம் வாசிக்கப் பெற்று அதற்கு வேண்டிய வேலைகள் செய்யும்படி காரியதரிசிகளுக்கு கௌன்ஸில் அதிகாரம் கொடுக்கிறது.

10. காரியதரிசி ஸ்ரீமான் பா. ம. பாண்டியநாடார் அவர்கள் எழுதிக்கொடுத்த ராஜிநாமா கடிதம் வாசிக்கப்பெற்று அவரையே காரியதரிசியாக இருக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டதற்கிணங்க ராஜிநாமா கடிதம் அவர்களால் திரும்ப வாபஸ் வாங்கிக் கொள்ளப்பட்டது.

வந்தனோபசாரத்துடன் இரவு 10-மணிக்கு கூட்டம் முடிவுபெற்றது.

---

## இலங்கையில்

### புதிய போஷகப் பிரபுக்கள்.

1 ஸ்ரீமான் கொ. மி. தே. வியாகப்பநாடார் அவர்கள் (வடக்கன்குளம்)
2 " கி. மு. இ. மிக்கேல்நாடார் அவர்கள் (வடக்கன்குளம்)
3 " கி. மு. ம. மிக்கேல் அந்தோணிநாடார் அவர்கள் (வடக்கன்குளம்)
4 " பா. ஏ. சிலுவைநாடார் அவர்கள் (கள்ளிக்குளம்)
5 " சூ. தை. சிலுவை க்ஷத்திரியர் அவர்கள் (வடக்கன்குளம்)

---

## பக்ஷிமுடன் வளர்த்து படுகொலை செய்வதா?

"கொல்லாவிரதம் குவலயமெல்லாமோங்க
எல்லார்க்கும் சொல்லுவ தென்னிச்சை பராபரமே"

"தன்னூன் பெருக்கற்குத் தான்பிறி தூனுண்பானெங்ஙனமாளுமருள்"

கொலைமறுத்தல், கொலைமறுத்தலெனும் பேரொலி உலகெங்கும் முழங்கும் இக்காலத்தில் பல ஊர்களில் பல வகையான ருதுநாட்கள் ஏற்படுத்தி அவ்வகைத் திருநாட்களை விசேஷிப்பதாக எண்ணி மாமிச இச்சைமேற்கொண்டு அநேகர் பல நாட்களுக்கு (ஒரு வருஷம், ஆறுமாதம்) முன்னதாகவே பால்மணம் மாறாத ஆட்டுக்குட்டிகளைவாங்கி அதை நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்த்து தான் எங்குபோனாலும் தன்னோடு கூட்டிக்கொண்டு, தான் ஸ்நானம் செய்தாலும் செய்யாவிட்டாலும், சாப்பிடாவிட்டாலும், அதைக்குளிப்பாட்டி எவ்விதத்திலும் சிரமம்பாராமல் அதற்குரிய ஆகாரவகைகளான குழை தழைகளை எங்கு சென்றாகிலும் எப்படியாவது கொண்டுவந்துபோட்டும், அது சரியாய்ச் சாப்பிடாவிட்டால் மிகுந்த வருத்தம்கொண்டு அதை எப்படியாவது சாப்பிடச்செய்ய வேண்டுமென்ற பிரியத்தோடு (அன்புள்ள தாய்மார்கள் தங்கள் சேய்களுக்கு எப்படி அமுதளிப்பார்களோ! அதைப்போல்) குழை தழைகளை நன்றாய்ப் பக்குவப்படுத்திக் கொஞ்சம் கொஞ்சமாக ஊட்டிவளர்த்து கொஞ்சம் பிராயம் வந்தபின் அதற்கு அணிமணியாபரணங்களாக உலோகங்களால் செய்யப்பட்ட சில வஸ்துக்களையும், துணியில் பல வர்ணங்களமைந்த வேலைப்பாடுள்ள (சட்டைபோன்ற) உறையும் இன்னும் பல வேடிக்கையான சாமான்களையும் அணிவித்து எக்கோலத்தைக்கண்டு சந்தோஷமாய் வளர்த்து (கொன்று தின்ன வேண்டுமென்ற கொடிய எண்ணத்தையே கொண்டிருந்து) பிரியமும், சந்தோஷமும், அன்பும், அடியோடுபோய் திருநாள்வந்தால் பக்ஷமென்பதும் பரிதாபமென்பதுமின்றி உயிரை வாங்கிவிடுகிறார்கள். என்னே இவர்களின் காருண்யமில்லாச் செய்கை! ஒரு சிறிதும் எவ்விதத்திலும் சிரமம்பாராமல், தானபெற்ற குழந்தையினும் அருமையாய் வளர்த்தும், இடாய்களை அலைகள் அலற அலற துள்ளத்துள்ள கொஞ்சமும் பாவத்திற்கு அஞ்சாதவர்களாய் அவைகளுக்கு எமனைப்போல் கூரிய வாள்கொண்டு அந்தோ கழுத்தை அறுக்க எப்படித்தான் மனம் சமாதானப்படும்! நமது தேகத்திலிருந்து ஒருசொட்டு இரத்தமாவது கொடுக்கச் சம்மதிப்போமா? சுட்டுவிரலையாவது வெட்டி சுவாமிக்குப் பலியிடச் சம்மதிப்போமா? ஒருக்காலும் செய்யமாட்டோமன்றோ! இவ்விதமுள்ள நாம், பகுத்தறிவற்ற பிராணிகளை சுவாமிக்குப் பலியிடுவது என்ன நியாயம்? இச்செய்கையால் ஏற்படும் பலன்தான் என்ன? பழியும் பாவமும். தானேயன்றி வேறு எவ்வித நன்மையும் சித்திக்காதென்பது தெளிவன்றோ! கொலையை மேற்கொள்வதால் உண்டாகும் இழிவையும் கேட்டினையும், கொலையைத்தள்ளி அஹிம்சைமையால் வரும் பெருமையும் நற்பேற்றினையும் ஆன்றோர்தம் திருமொழிகளான் உணரக்கிடக்கின்றதன்றோ! "கொல்விடுக்குதென்று கூறியமாக்களை, வல்விடிகாரர் வரிகயிற்றாற்கட்டிச் செல்லிடுநீரென்று தீவாய் நரகிடை நில்லிடுமென்று நிறுத்துவர்தாமே", என்று திருமந்திரமும், "கொல்லாமை மேற்கொண்டொழுகுவான் வாழ்நாள்மேல் செல்லாதுயிருண்ணுங்கூற்று" என்று பொய்யாமொழியும் மற்றும் எவ்வளவோ நியாயங்களும் இருக்கின்றனவன்றோ? விரிக்கில்பெருகும். சகோதரர்களே! இனியாவது சுவாமிக்கு நேர்த்திக்கடனுக்காக இவ்வித (கொலை) பாதகங்களைச் செலுத்தாமல் ஒழித்து கற்பூரம், சாம்பிராணி கமழும்படி செய்து பாற்பொங்கல், சர்க்கரைப் பொங்கலிட்டு பானக்கம் வைத்து உங்கள் பக்தியைச் செலுத்துங்கள். எல்லாம்வல்ல பிரான் நம்மனைவருக்கும் நல்லருள் புரியவேண்டுவோமாக.

அ. ச. சோ. மீ. பழனிச்சாமி,
சின்னமனூர்.

---

## தேவஸ்தான எலெக்ஷன்.

சென்ற வருஷம் சென்னைசட்டசபையில் பலத்த வாதங்களுக்கிடையே நிறைவேற்றப்பட்ட ஹிந்து தேவஸ்தான பரிபாலன சட்டம் அமுலுக்கு வந்திருக்கிறது. அந்தச் சட்டத்தின்படி இனிமேல் எல்லா தேவஸ்தானங்களுக்கும் கமிட்டி மெம்பர்கள் பொது எலெக்ஷன் மூலம் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். நிலத்தீர்வை வருஷமொன்றிற்கு ரூ 50 பேரிஜ் செலுத்தும் பட்டாதார்களும் சென்ற வருஷத்தில் (இன்கம் டாக்ஸ) வருமானவரி செலுத்தியவர்களும் (இந்தியன் லெஜிஸ் லேட்டிவ் அஸெம்பிளி) இந்தியா சட்டசபைக்கு ஓட்டுகொடுக்க உரிமைபெற்றவர்களுமான ஹிந்துக்களனைவரும் (21 வயதுக்கு மேற்பட்டவர்கள்) தேவஸ்தான வாக்காளர் தொகுதியில் ஓட்டுகொடுக்க யோக்யதையுள்ளவராவார்கள். கூடிய சீக்கிரத்தில் இந்த எலெக்ஷன்நடைபெறுமெனத் தெரிகிறது. இந்த எலெக்ஷனில் அபேக்ஷகர்களாக நம்மவர் சிலர் முன்வரக்கூடும். ஷை தொகுதிக்கு தற்சமயம் துரிதமாக யோக்யதையுள்ள ஓட்டர்களின் பெயர் லிஸ்டை தயாரித்தனுப்பும்படி கிராம கர்ணங்களுக்கு உத்தரவு வந்திருக்கிறது. கிராம கர்ணங்கள் அவசரத்தினாலும் சிலர் துவேஷத்தினாலும் நம்மில் ஓட்டுரிமைபெற்றவர்களின் பெயர்களையெல்லாம் சரிவரப் பதிந்தனுப்புவதில் ஒரு சமயம் தவறிவிடக்கூடுமாதலால் ஒவ்வொரு கிராமத்திலுமுள்ள முக்கியஸ்தர்கள் இவ்விஷயத்தில் போதிய கவனம் செலுத்தி அருகதையுள்ளவர்களின் பெயர்கள் கொஞ்சமும் தவறிவிடாமல் சரிவரப்பதிவாகும்படி செய்ய வேண்டியது ரெம்ப முக்கியமான காரியம். ஓட்டர்களின் பெயர் பதிவாகிற ஆரம்ப சமயத்தில் மெத்தனமாயிருந்துவிட்டு, எலெக்ஷன் சமயத்தில் சிரமப்படுவது நமக்கு நெடுகிலும் வழக்கமாயிருப்பதாலும், பதிவுசெய்ய சொற்ப தவணைதான் இருப்பதாலும் ஆங்காங்குள்ள அபிமானிகள் கவனம் செலுத்துமாறு கோருகிறேன்.

கே. கல்யாணசுந்தரன்,
கச்சினுவிளை.

## திருநெல்வேலி ஜில்லா மகாஜனங்களுக்கு.

நமது "மித்திரன்" க்ஷேம நிதி லாட்டரிச் சீட்டு விற்பனைக்கும், பழய சந்தாப் பாக்கிகளை வசூலித்து புதிய சந்தாதார்களைச் சேர்க்கும் பொருட்டும் திருநெல்வேலி ஜில்லா வெங்கணும் சுற்றுப் பிரயாணஞ் செய்ய ஸ்ரீமான் ஏ. எம் எஸ். அண்ணாமலை நாடார் அவர்களை அனுப்பி வைத்திருக்கின்றோம். ஆகையால் அன்பிற்குரிய பெரியோர்களும், நண்பர்களும், வாலிபர்களும் இது சமயம் மித்திரன்பாலுள்ள கடமையை நிறைவேற்றக்காலத்தும் போற்றுமாறு அவருக்குச் சகலவித சகாயமுஞ் செய்து லாட்டரியை வெற்றிபெறச்செய்யவேணுமாய்த் தாழ்மையாய்க் கேட்டுக் கொள்கின்றோம்.

பத்திராதிபர்.

---

## நாடார்குலமித்திரன்

அக்ஷய ஹு பங்குனி மீ ௮ உ

## பெரியார் வருகை.

நிலவுலாவிய உலக மெல்லாம் பெரியார், பெரியார், பெரியாரெனமுக்காலும் சொல்லப்பெறும் ஏழை பங்காளர் மகாத்மா காந்தியடிகள் எப்ரல் மீ 6 உ நமது சென்னைமாநகருக்கு வந்து தென்னாட்டுக்கும் விஜயஞ் செய்வதாக அறிந்து மிகவும் சந்தோஷிக்கின்றோம். அடிகள் வருகையை நம் நாடு சந்தோஷத்துடன் வரவேற்பதன்றி நம் நாட்டரசர்களாகிய மைசூர், மலையாளம், கொச்சி, கொல்லங்கோடு முதலியவற்றின் அரசர்களெல்லாம் மிகுந்த பக்தி சிரத்தையுடன் அழைத்திருக்கிறார்களென்று தெரியவருகிறது. அடிகள் இதற்கு முன் மும்முறை தென்னாட்டிற்கு விஜயஞ் செய்திருக்கிறார்களென்றாலும், இம்முறை வருகையே எல்லா அபிப்பிராயமுடையவர்களும் அடிகளுக்கு முடி வணங்கி அழைக்கும் விசேஷ வருகையாகும். செந்துகிலைக் கண்டு மிரளும் காளைகள் போல கதரைக் கண்டு மிரண்ட கவர்ன்மெண்டும் கதர் விஷயத்தில் ஒத்துழைக்க முன் வந்திருப்பது அடிகளுக்கு மிகுந்த ஆறுதலையளிக்கக்கூடும். கைராட்டினமும், கதருந்தான் நம் நாட்டிற்குக் கதி மோட்சமளிக்கக் கூடுமென்று கதரை காங்கிரஸ் நிர்மாணத் திட்டத்தோடு பிணைத்துப் பார்த்தும், கதர் கட்டுவதற்கே காங்கிரஸ்காரர் படும் கஷ்டங்களை யுணர்ந்து அதைத் தமது சொந்த வேலையாகப் பிரித்தெடுத்துக் கொண்டார். நாட்டின் வறுமையகலக் கருமமே கண்ணாயிருந்து வருகிறார். இச்சந்தர்ப்பத்தில் சென்னை அரசாங்கத்தார் நம் நாட்டுக் குடிசைத் தொழிலை அபிவிருத்தி செய்ய வெண்ணி கையால் நூற்று நெய்வதை எப்படி விருத்தி செய்யலாமென்று அறிய ஒரு உத்தியோகஸ்தரை நியமித்திருப்பது சுபசகுனமாகும் என்று மகிழ்வுறுகின்றோம். தஞ்சை ஜில்லாப் போர்டு கலாசாலைகளில் கைராட்டினமும், கதரும் உற்பத்தி செய்யும் முறையைப் போதிக்கத் தீர்மானித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

நம் நாட்டில் பருவ மழை குன்றி பஞ்சக்குறி தோன்றியிருந்தாலும் மகாத்மா வருகிறாரென்று கேள்விப்பட்ட மாத்திரம் ஜனங்கள் மனது, மழை பெய்தபூமி குளிர்ந்தவாறு குளிர்ந்திருக்க வேண்டும்; அதற்கேற்ப மழையும் பெய்திருக்கிறது. மகாத்மாவுக்குப் பணமுடிப்புக்கொடுப்பதற்கு ஸ்ரீமான் ராஜகோபாலாச்சாரியார் நாடெங்கும் நல்ல கிளர்ச்சி செய்து வருகிறார். அவரையொரு குட்டிக் காந்தி சுற்றுப்பிரயாணஞ் செய்கிறாரென்று கூறுவது குறிப்பிடத்தக்கது.

இச்சந்தர்ப்பத்தில் நாடார் மகாஜனங்களும் தங்கள் கடமையைச் செய்யத் தவறமாட்டார்களென்றே நம்புகின்றோம். நாடார் சமூகத்திற்கு எல்லாத் துறைகளிலும் வழிகாட்டியாய் வந்து கொண்டிருக்கும் நமது விருதுநகர் நாடார் குலாபிமானிகள் மகாத்மாவை வரவேற்று 5000 ரூபாய்கொண்ட பணமுடிப்புக் கொடுப்பதற்கு, விருதுநகர் இதர பிரபல கனவான்களையும் ஒன்று சேர்த்து ஒரு கமிட்டி அமைத்துத் துரிதமாகப் பணம் வசூலிக்கப்பட்டுவருகிறதென்றும், தூத்துக்குடியில் நாடார் சமூகத்தார் தனியாக ஆயிரம் ரூபாய் கொண்ட பண முடிப்பு மகாத்மாவுக்கு அளிக்கஏற்பாடாகிறதென்றும் அறிந்து அகமகிழ் வெய்துகின்றோம். மகாத்மா பிரயாணப்பட்டு வரும் வழியிலுள்ள நாடார்களும் ஆங்காங்குள்ள வரவேற்புக் கழகங்களிற் சேர்ந்து கொள்ளத் தவற மாட்டார்கள். மேலும் வருகிற புது வருடப் பிறப்பை கதர் வருடப்பிறப்பாகக் கருதி மகாத்மா காந்தி பக்தர்களாய், அடிகளை அனைவரும் கதர் அணிந்து வரவேற்கும்படி வேண்டுகின்றோம்.

---

## குறிப்புகள்.

### மகாநாடு

நாடார் மகாஜன சங்கம் மகாநாடு ஒன்று திருநெல்வேலியில் நடைபெற வேண்டுமென்றும், அதற்குத் தலைமையாக மகாத்மா காந்தியை அழைக்க வேண்டுமென்றும் இரண்டு வருடங்களாகப் பிரபலமாய்ப் பேசப்பட்டு வருகிறது. மகாத்மாவைத் தலைமை வகிக்கும்படி மகாஜனங்கள் சம்மதித்தால் தாங்கள் முன்னின்று வேலை செய்யலாமென்றும் சில முக்கியஸ்தர்கள் சொல்லி வந்தார்கள். அவ்வாவல் மிகுதியாலேயே முக்கூடல் ஸ்ரீமான்கள் சொக்கலால், இ. பி. குமாரவேல் நாடார் முதலியவர்கள் முன்னொரு முறை மகாநாட்டை திருநெல்வேலிக்கு அழைத்தார்களென்றும் கேள்விப்பட்டோம்.

மகாநாட்டிக்கு மகாத்மா காந்தி தலைமை வகிப்பதில் யாருக்கும் ஆட்சேபனை யிருக்கமாட்டாது. அவர் தலைமை வகிக்க இது சமயம் இசையவுங் கூடும்; இசையாவிடினும் விஜயஞ்செய்ய மறுக்கமாட்டார். அவரை வரவழைப்பதற்குள்ள கஷ்டங்கள் ஒன்று மில்லாமல் அவர் தாமே நாடு சுற்றிவருகிறார். இச்சமயம் ஏற்ற சமயம்! ஆகையால் மகாத்மா வருந்தருவாயில் மகாநாடு கூட்டிவைக்க ஏன் பிரயாசைப்படக்கூடாது?

### துணிகரமான கண்டனம்.

மேனாட்டு மோகினி தோழர் சக்லத்வாலா என்பவர் "காமாலைக் கண்ணுக்குக் காண்பதெல்லாம் மஞ்சள் நிறம்" என்பதற்கேற்ப, மகாத்மா காந்தி கொள்கைகளை யெல்லாம் கண்டித்து ருண தோசம் கூறியிருக்கிறார். அவர் கேள்வியெல்லாம் உப்புக்கல் பெறாத உபயோகமில்லாத கேள்வி; அறியாத்தனமான கேள்வி யென்று கூட மொழியலாம். இங்கிலாந்தார் தம்மை இழிவுபடுத்துவதைக் காப்பாற்றிக் கொள்ளவே இக்கேள்வி கேட்டிருக்க வேண்டும்; அல்லது மகாத்மாவும் தம்மைமதித்தப்பதில் எழுதினாரென்ற பெருமை சம்பாதித்துக் கொள்வதற்காகவே எழுதியிருக்கவேண்டும்.

மகாத்மா கட்டாயம் சரியான பதில் கொடுப்பார். சிறு பிள்ளைகள் வினாவுக்கும் விடையளிப்பவர் இங்கிலாந்து போய்ப் படித்து ஐரோப்பிய மாதை மணந்து பார்லிமெண்டு அங்கத்தவராயிருக்கும் பார்லிக்காரராகிய தோழருக்குப் பதில் சொல்லாமலிருப்பாரா?

தம்முடைய நிர்வாகத்தைக் குறை கூறிய பத்திரிகையின் பெயரைக் குறிப்பிட்டாலே அப்பத்திரிகைக்குப் பெருமை ஏற்பட்டுவிடுமென்று சென்னைச் சட்டசபையில் ஸி. பி. ராமசாமி ஐயரவர்கள் அஞ்சியதுபோல் அவர் அஞ்சுபவரல்ல; உள்ளதை மறைக்காமற் பேசும் உத்தமர்; ஆகலால் அவர் பதில் எழுதுவார். ஜனங்களும் அப்பதிலை ஆவலுடன் எதிர்பார்க்கக் கூடும். அதைப்பார்த்து அபிப்பிராயத்தை அறிவிப்பதோடு சக்லத்வாலாவின் கேள்வியையும்அதற்குரிய மகாத்மாவின் பதிலையும் மறுமுறை வெளியிடுவோம்.

### க்ஷேம நிதி.

"நாடார்குல மித்திரன்" க்ஷேமத்தைக் கருதி சிலோனுக்குச் சென்ற மித்திரன் அதிபரவர்களை கொழும்பில் வாலிபர்கள் குதூகலமாய் வரவேற்று வேண்டுவன செய்து கொண்டிருக்கிறார்களென்று அறிந்து மிகவும் சந்தோஷிக்கின்றோம். அதுபோல் சிலோன் நாட்டுப்புறங்களிலும் வேலை நடக்குமென்றே நம்புகின்றோம்.

### குடியரசர் வருகை.

பிராமணீயத்தைப் புறக்கணித்து இராமணியகர சுயமரியாதையை சர்வ ஜனங்களிடத்திலும் தாண்டவமாடச் செய்யப் பிரமாண்டமான பிரசாரம் கிராமங்கள், நகரங்கள் தோறும் இயற்றி வரும் பிராமணரல்லாதார் மாபெருந் தலைவராகிய தேசபக்த சிகாமணி வைக்கம் வீரர், ஈரோடு ஸ்ரீமான் வி. இராமசாமி நாயக்கரவர்கள், நாளது பங்குனி மீ 15 உ நடைபெறவிருக்கும் அருப்புக்கோட்டையைச் சேர்ந்த சொக்கலிங்கபுரம் தேவாங்கர் குல முன்னேற்ற சபையின் முதலாவதாண்டு நிறைவுவிழாவிற்கு அக்கிராசனம் வகிக்கத் திருவுள்ளங் கொண்டு இவணுறுவதாக அறிகிறோம். இது பற்றி நகரெங்கணும் கிளர்ச்சி பலத்திருக்கிறது. வரவேற்புக்கான ஏற்பாடுகள் துரிதமாய் நடைபெற்று வருகின்றன. பொதுக் கூட்டங்களும், சமூகக்கூட்டங்களும், வரவேற்புகளும் தனித்தனியாக நடைபெறலாமெனத் தெரிகிறது.

இந்து மதத்திற் பிறந்த பிராமணரல்லாதாராகிய நமக்கு முன்னேற்றத் தடைக் கல்லாய் மதத்தின் பேரால் வஞ்சகமாய் ஏற்படுத்தப்பட்டிருக்கும் கட்டுப்பாடுகளினின்றும், விடுதலை கிடைக்கும் நோக்கான் "குடியரசு"க் கதிபராய், இனிவரும் குடியரசுக்குத் தலைவராய்க் கூடிவரும் ஸ்ரீமான் நாயக்கரவர்களின் வருகையானது இனி வர விருக்கும் கதரரசரின் வருகைக் கறிகுறியாமெனக் கொண்டு அன்னார்வரவை எதிர் நோக்குவோமாக.

---


**நாற்பத்திநான்கு**

நாட்களே இன்னும் இருக்கின்றன!

உங்கள் அதிஷ்ட உத்தரவிருக்கிறது.

ஆகையால் நமது மித்திரன் லாட்டரிச் சீட்டு விற்பனையிலீடுபடுங்கள்.


## நமதிரு மித்திரர்கள்.

பாரோர் புகழும் பாண்டிய குலாதிபர்களே! ஓர் தேசமோ அல்லது ஜன சமூகமோ முன்னேற வேண்டுமானால் தேசத்தவர்க்கோ அல்லது அச்சமூகத்தவர்க்கோ அளவுகடந்த அபிமானமிருக்கவேண்டும். நம் நாடார் சமூகத்திற்கோவென்றால் தேசாபிமானம் பாஷாபிமானம் குலாபிமானமெல்லாம் ஒருங்கேயமையப் பெற்றிருக்கின்றன. என்றாலும் பத்திரிகாபிமானத்தில் மிகவும் பின்னடைந்தவர்களாய் இருக்கின்றோம். இதுவரை எத்தனையோ நம்குலப் பத்திரிகைகள் தோன்றி மறைந்திருக்கின்றன. அவைகட்கெல்லாம் காரணமறிவோம். தற்போது நமது சமூகத்திற்கு பெரிதும்உழைத்து வருகிற பத்திரிகைகள் கஷ்ட நிலைமையோடு நடப்பதாக நம்பத்திரிகைகளில் சமீபமாய் பார்த்து வருகிறோம். எம் குலப் பெரியோர்களே! வாலிபர்களே! நாமெல்லோரும் ஏகமனதாய்க்கூடி அவ்வகைக்கஷ்ட நிலையுற்றிருக்கும் நமது நாடார்குல மித்திரனுக்கு தக்கபண்டு ஒன்று ஏற்படுத்த ஆரம்பித்திருக்கும் க்ஷேமநிதிச் சருமப்பண்டு லாட்டரியைக் குறித்த செய்தியில் பிரைஸ் எடுக்க நாம் ஒவ்வொருவரும் பிரயாசை எடுத்து என்றுங்குன்றாது நின்றுலவச் செய்வதே நம் கடமையாகும். உலகத்திற்கு ஒளியாயிருக்கும் சூரிய சந்திரர்களேபோல் நம்குலத்திற் கொளியாயிருப்பது நம்மிரு பத்திரிகைகளே! அதாவது, "நாடார்குல மித்திரன்" "க்ஷத்திரிய மித்திரன்". இவ்விரண்டு மித்திரர்களையும் சமதிரு நேத்திரங்களாகப் பாவிக்க வேண்டும். தற்சமயம் சென்னையில் வெளியாகும் க்ஷத்திரிய மித்திரன் சற்று தயங்கி இருப்பதாகத் தெரிகிறது. நாடார்குல மித்திரன் க்ஷேம நிதித்தருமப்பண்டு லாட்டரியை எல்லாரும் சிரத்தையெடுத்து வெற்றியுடன் நடத்திவைப்பதோடு வீரசேனாதி விஜயதுரை சிம்மமவர்களால் நடைபெற்றுவரும் க்ஷத்திரியமித்திரனுக்கும் ஆதரவுகாட்டி என்றும் நின்றுலவச் செய்யவேண்டும்.

நம்குறைகளை எடுத்துரைப்பவர்களும், நம் தூக்கத்தினின்றுந் தட்டி எழுப்புபவர்களும் நம்மிரு மித்திரர்களே. க்ஷத்திரிய மித்திரன் சாஸ்திர சம்மதிபெற்ற ஜாதீய ஆராய்ச்சிக்காரன். நாடார்குல மித்திரனோவென்றால் இளந்தென்றலோடு கூடிய பூரணச் சந்திரனைப்போல் நம்மிதயங் களிக்க நம் நாடார் மஹாஜன சங்கக் கொள்கைகளையும், கிளைச்சங்கங்களின் செய்திகளையும், வாசகசாலையின் வன்மைகளையும் ஆங்காங்கு நடக்கும் சமூகக் கூட்டங்களின் ஏற்பாடுகளையும், நாம் முன்னேறவேண்டிய சாதனங்களையும் நமக்கு உடனுக்குடன் ஓடோடியும் வந்து சொல்லும் உண்மைத்தூதனென்றே ஏற்றப் பெறுந் திறமுடைத்தான். ஓர் மகவைப்பெற்று வளர்க்க மாதா பிதாக்களிருவரும் எவ்வளவோ கஷ்ட நஷ்டங்களை அநுபவிக்கிறார்கள்! அஃதேபோல் நம்மிரு பத்திராதிபர்களும் அளவிறந்த கஷ்ட நஷ்டங்களையனுபவித்தும் விடாமுயற்சியுடன் நடத்துவார்களென்பது திண்ணம். ஆகவே நாமெல்லோரும் அவர்களுக்கு பக்கப்பலமாய் நின்று பாருள்ளமட்டும் பருதி மதிபோல் பிரகாசிக்கச் செய்வது நாடாராய்ப் பிறந்த நம் ஒவ்வொருவருடையவும் கடமையாகும். திருவாங்கூரைச் சார்ந்த மன்னணம் என்னுமூரில் "நசராணித்தீபிகை" என்னும் கத்தோலிக்கப் பத்திரிகையொன்று 1887-ம் வருடம் வாரப்பதிப்பாக ஆரம்பிக்கப்பெற்று நாளடைவில் வாரமிருமுறை, மும்முறையாகி, தற்சமயம் தினசரியாக ஜெகமெங்கும் பிரகாசிக்கின்றது. அதேபோல் நாமும் நம்மிரு மித்திரர்களையும் நாளடைவில் விருத்தியாக்கி நாடெங்கும் பிரகாசிக்கச் செய்வோமாக.

அ. க. கந்தசாமிநாடார்,

நுவரலியா, சிலோன்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

# பஞ்சமாராஜ்ஜியமும் கிராம சுயராஜ்ஜியமும்.

இந்தியத் தேசாபிமானத் தலைவர்கள் வெகு காலமாய் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டாருடன் போராடியதின் பலனாக சில சீர்திருத்தங்கள் 1920-ம் வருஷத்தில் ஏற்பட்டிருக்கின்றன. அதில் கிராமப்பஞ்சாயத்துச் சபைகளை 7 லட்சம் கிராமங்கொண்ட நம் தேசத்தில் ஒவ்வொரு கிராமமுந்தவறாமல் ஸ்தாபிக்கவேண்டுமென்பதொன்று. இதன்படி மற்ற இடங்களிலெல்லாம் கிராமப்பஞ்சாயத்துகளை ஏற்படுத்தி வெகு மேன்மையாய் நடந்துவரும் இந்நாளில் நம் பஞ்சமா ராஜ்ஜியத்தில் இதைப்பற்றி யாதொரு பிரயத்தனமும் செய்யாமலிருப்பது நம் பெரும் குறைவேயாகும். சில பேர்களுக்குப் பஞ்சாயத்தின் தன்மை இன்னதென்று தோன்றவில்லை. சில பகுதிகளில் பஞ்சாயத்தின் பெயரே தெரியாமல் இருக்கிறது. ஆகையால் இவ்வியாசத்தைக் கண்ணுறும் கனவான்கள் இதை அங்கீகரிப்பார்கள் என்று எண்ணுகிறேன். இராஜபாளையத்தில் கூடிய ஸ்ரீவில்லிபுத்தூர், சாத்தூர் தாலுகா கிராமப் பஞ்சாயத்தார் மகாநாட்டில் இராமநாதபுரம்கலெக்டர்ஸ்ரீமான் எஸ். வி. இராமமூர்த்தி ஐ. ஸி. எஸ். அக்கிராசனம் வகித்துக்கூறிய சில முக்கிய கருத்துகளாவன. "இந்தியாவில் கிராம வாழ்க்கைக்குரிய மதிப்பைக் குறைத்து பட்டணவாழ்க்கைக்கு அளவுகடந்த மதிப்பை அளித்து அதையே பெரிதாக மதிக்கிறார்கள் என்பதில் சந்தேகமில்லை. ஜில்லா போர்டு, தாலுகா போர்டு முதலிய ஸ்தாபனங்களின் அதிகாரிகளும் அங்கத்தினர்களும் முக்கியமாய் பட்டணங்களைப் பற்றியும் தாலுகாக்களைச் சுற்றிவாழ்வோரையும் மட்டுமே கவனிக்கிறார்கள். கிராமங்களைக் கவனிப்பதில்லை. ஒவ்வொரு கிராமத்திலும் வசூல் செய்யும் சர்க்கார் தீர்வையில் ஒரு பாகத்தை நேரே அக்கிராமத்திற்கென்று கொடுக்காமல் எல்லாவற்றையும் சேர்த்துக் குவித்து பின்னால் மாகாண சர்க்கார் ஜில்லா போர்டு, தாலுகா போர்டு மூலம் கிராமவாரியாகப் பங்கிட்டு தனித்தனியாகக் கொடுப்பது நியாயமல்லவென்று எண்ணுகிறேன். சுகாதார நிலைமை எங்கேயாவது பங்கம் ஏற்படும்பக்ஷத்தில் நீங்களே அதை நேரே எதிர்த்து அக்குறையை நிவர்த்தி பண்ணிக்கொள்ளுங்கள். உங்களது வறுமையை நீக்க வேண்டுமானால் நீங்கள் ஒன்றுகூடி ஒரே மனிதனைப் போல் நின்றுகொண்டு ஒழுங்காய் சர்க்காரிடமிருந்து வேண்டியது கேட்டுப்பெற்று அக்குறையை நிவர்த்தித்துக் கொள்ளுங்கள். ஒரு கிராமத்திலுள்ள ஆரோக்கியமும் செல்வமும் அறிவும் வளரவளர கிராமப்பஞ்சாயத்தாரும் வளர்ந்து முன்னேற்றமடைந்து வருவார்கள். அப்போது கிராமத்துகுளங்கள், வாய்க்கால்கள் இவைகளைப் பாதுகாத்து வேண்டியபடி தண்ணீரை உபயோகித்துக் கொள்ளுதல், கிராம உத்தியோகஸ்தர்களின் தொந்தரை நீக்குதல், நீதி சம்பந்தமான காரியங்களைப் பார்த்தல், சுருங்கிய அளவில் தீர்வை ஏற்படுத்தல் இவை போன்ற மற்றும் அவ்வளவு அதிகாரங்களையும் நீங்களே வகித்துப் பார்க்கும்படியான திறமை உங்களுக்கு ஏற்படும். இவ்வாறு பல அதிகாரங்களும் உங்களுக்கு வந்துவிடும் பக்ஷத்தில் பண்டைக்காலத்தில் கிராமத்தார்கள் அடைந்திருந்த பூரண சுதந்திரம் நமக்கு மறுபடியும் உண்டாகும். கிராமப் பஞ்சாயத்துகள் வளர்ந்து எல்லா விஷயங்களிலும் திறமையுள்ளவைகளாக முன்னேற்றமடைந்து வருதலே இந்தியாவின் குடியரசின் தன்மையையும் நிலையையும் மறுபடியும் உணர்தற்கு வேண்டிய முதற்படியாகுமென்பது என்னுடைய அபிப்பிராயமாகும்." என்று கூறியிருக்கிறார். ஒரு தாலுகா போர்டு ஜில்லா போர்டு முதலியவைகளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரத்தைப் பார்க்கிலும் மேலான அதிகாரம் இந்தப் பஞ்சாயத்துக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

அதாவது தாலுகா போர்டினால் வசூலிக்கப்படும் தொழில்வரி, லைசென்ஸ்வரி, மீன்பிடிக்கும் படகுவரி, மாமூலம் கிடைக்கும்வருமானம், மார்க்கெட் [illegible] பேட்டை, பாதைபராமரிப்பு. ரஸ்தாபோடுதல், சுகாதாரம், பள்ளிக்கூடங்கள், வைத்தியசாலை, விவசாயப்பண்ணை, வாசகசாலை, ஜலசப்ளை, கிஸ்திப்பணமோடு வசூல் செய்யும் ரூபாய்க்கு ஒரு அணா தீர்வை முதலிய சகல அதிகாரங்களும் வருமானங்களும் இந்தப்பஞ்சாயத்துக்கே கொடுக்கப்பட்டிருக்கின்றன. நம் முன்னோர்கள் காலத்தில் எந்தெந்தக் கிராமத்தில் என்னென்ன நன்மைகள் எவ்விதமாக ஏற்பட்டிருந்தனவோ அவ்விதமாகவே அந்தந்த நன்மைகளைச்செய்து கொள்ளலாம். ஆகையால் பஞ்சமா கிராமந் தோறும் இப்பஞ்சாயத்தை வைக்கும்படி வேண்டுகிறேன். கிராம முனிசிபுகள் ஷை பஞ்சாயத்துக்கு விட்டுக்கொடுக்க வேண்டியது பவுண்டும், ஜனன மரணக்கணக்குந்தான். இதைப்பற்றி நாடார் கிராம முனிசிபுகள் வருந்த வேண்டியதில்லை. எல்லாம்வல்ல ஈசன் அருள்புரிவாராக.

அ. சுந்தரக்குமார் ஆதித்தநாடார்,
காயாமொழி.

# மகாத்மாவை வரவேற்க.

### தூத்துக்குடியில் முயற்சி.

ஸ்ரீமான் மா. வே. ஷண்முகவேல் நாடார் அவர்கள் ஞாபகார்த்தவாசகசாலையின் ஆதரவில் காரைப்பேட்டை சபாமண்டபத்தில் 9—3—27-ல் மகா-ள-ள-ஸ்ரீ அரி. அ. ச. துரைச்சாமிநாடார் அவர்கள் அக்கிராசனத்தின்கீழ் ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது. அது சமயம் ஆங்குற்றிருந்த சேலம் ஸ்ரீமான் சக்கிரவர்த்தி ராஜகோபாலாச்சாரியவர்கள்மகாத்மாகாந்தியடிகளாரின் வருகை குறித்துப் பின்வருமாறு பேசினார்கள்:—

"லோகசிரேஷ்டரான உத்தமர் மகாத்மாகாந்தி நமது நாட்டின் வறுமையைப் போக்குதற்கு ஆயுதமாகக் கண்ட கதரபிவிர்த்திக்காக தென்னாடு விஜயம் செய்யும்போது தூத்துக்குடிக்கும் வரவிருக்கிறார்கள். அவ்வமயம் வாசகசாலை நிர்வாகிகள் ஒத்துழைப்பால், தனியாக வாசகசாலையின் சார்பாக ஓர் பணமுடிப்பு கொடுக்க வேணுமென்பதைக் கேட்கவே யான் இவ்விடம்வந்திருக்கிறேன். கதரபிவிருத்திக்குக் கொடுக்கும் பணம் ஏழைகள் வயிற்றில் பால் வார்த்ததற் கொப்பாகும். கதரபிவிருத்தி சர்க்காருக்கு விரோதமானதல்ல; சமூகப்பிரச்னையுமல்ல; இந்தியாவிலுள்ள மக்கள் அனைவரும் சேர்ந்து ஒரு முகமாக நாம் காந்தியை உபசரிக்கவேண்டும். பிறப்புரிமையாகிய சுயராஜ்யத்தையும் நமது மானத்தையும் ஆன்மாவையும் காப்பாற்றத்தோன்றிய கடவுளுடைய சக்கரமே கைராட்டினம். நாட்டின் நலத்திற்கும் பாரதமக்கள் விடுதலைக்கும் உயிர் நாடியான கைத்தொழிலை விர்த்திசெய்யவும், நிரந்தரமான வறுமையை நாட்டைவிட்டு அகற்றவும், ஏழைமக்களைக் காப்பாற்றவும் கதரே ஏற்றமருந்து; அதுவே நல்மருந்து."

அக்கிராசனர் நாடார் குலத் தலைவர்கள் சிலரைக் கலந்து வாசகசாலையின் சார்பாக ஓர் பணமுடிப்பு மகாத்மாகாந்தி இவ்வூருக்கு விஜயம் செய்யும்போது அளிப்பதற்கு வேண்டிய பிரயாசைகள் எடுப்பதாகச் சொன்னார். ஸ்ரீமான் இராமநாதன் அவர்களும் விஷயப்பொலிவுள்ள பிரசங்கமொன்று நிகழ்த்தினர். ஸ்ரீமான் அ. ச. நடராஜநாடார் அவர்கள் கதரபிவிருத்தியில் எப்பொழுதும் நாடார்ஜன சமூகத்தினருக்கு விசேஷ அபிமானமேயிருந்து வருகிறதெனவும் படிப்படியாகப் பலர் சுத்தக்கதரையேயணிகிறார்களெனவும் சமூகப்பிரச்னையில் பிறருக்கிருக்கும் ஆவலைவிட அதிகப்பட்டதே நம்முடையதென்றும், வாசகசாலையில், தினசரி அங்கத்தினர்களெல்லோரும் கதர் நூற்றுவரும் விபரத்தையும்பணமுடிப்பளிக்கவேண்டிய அவசியத்தையும் எடுத்துச் சொல்லி தேசத்தொண்டர்களின் தியாகத்தைச்சிலாகித்து கதரபிவிருத்தியில் நாங்கள் தீவிர ஆசையுடையவர்கள் என்பதற்கறிகுறியாக வாசகசாலை அங்கத்தினர்களால் நூற்கப்பட்ட கதர் மாலை சூட்டினர். 6½-மணிக்குக் கூட்டம் இனிது கலைந்தது என்று காரியதரிசிகள் எழுதுகிறார்கள்.

# சர்வதேச சம்பவங்கள்.

யானை பார்க்கப்போன குருடர்களுடைய ஆராய்ச்சிக்கு யானை எவ்வாறெல்லாம் தோன்றப்பெற்றதோ, ராமாயாணம் பார்க்கப்போன மேகோனுக்கு ராமாயாணம் எவ்வளவு பழுவாய்த் தோன்றியதோ அவ்வாறு தானே சீனாவின் நிலைமை ஓர் மகத்தான வெள்ளையானைத் தரிசனமாக உலகத்தவரைப் பலவித உணர்ச்சிக்காளாக்கிக் கொண்டு வருகிறது. இங்கிலாந்திலிருந்து போதுமான யுத்தக்கப்பல்களும் காலாட் படைகளும் சீனாவுக்கு அனுப்பப்பட்டாயிற்றென்றும் இனி சேனைகளை அனுப்ப உத்தேசமில்லையென்றும், அவ்விதம் அனுப்பப்பட்டிருப்பதில் கூட ஏதேனும் நினையாத சங்கடங்களேற்படும் போது சமாளிக்கவேண்டியதன் பொருட்டு முன் ஜாக்கிரதையாகவும் அங்குள்ள ஏராளமான பிரிட்டிஷாரின் ஜீவன்களைக் காக்கவேண்டிய சுயபாதுகாப்பின் பொருட்டுமே யாகுமென்றும் வேறெவ்வித பலாத்காரமான கொள்கையும் கிடையாதென்றும், எதிர்பார்க்கிறபடி ஷை பிரதேசங்களில் சமாதானம் நிலவும் விஷயத்தில் நமது துருப்புகள் சீனபூமியில் ஓர் வெடி குண்டுகூட சுடாமல் போனபடியே திரும்பிவருவார்களென்றும் இங்கிலாந்தின் அந்நிய தேசகாரிய இலாக்கா மந்திரி ஒரு முறைக்கு அதிகமாய்க் கூறியிருக்கிறார்.

ருஷியர்கள் சீனாவில் நடக்கும் போராட்டத்தில் இன்னமும் வேவு பார்ப்பவர்களாகவும் இங்கிலாந்துக்கு விரோதமாயும் பீக்கிங் கவர்ன்மென்டுக்கு விரோதமாயும் நடபடி செய்து வருவதாக புகார் சொல்லப்பட்டு வருவதுடன் சமீபத்தில் அது விஷயமாய் சில ஸ்திரீ வேவுகாரர்கள் பீக்கிங் ராணுவ அதிகாரிகளால் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

இங்கிலாந்துக்கும் ருஷியாவுக்கும் ஏதோ போட்டி ஏற்பட்டிருப்பதாயும் அதன் சம்பந்தமாய் இங்கிலாந்து முன் ஜாக்கிரதையான நடபடி செய்துகொள்வதாய்ச் சொல்லப்படுவது தப்பபிப்பிராயமென்று இங்கிலாந்தின் அந்நிய காரியமந்திரி ஆஸ்டின் சேம்பர்லேன் சமீபத்தில் சொல்லியிருக்கிறார். இதனிடையில் சீனாவில் ஏற்பட்டுள்ள இரு கவர்ன்மெண்டுகளும் ஒன்றோடொன்று போராடிக்கொண்டு பல கிராமங்களையும் ரெயில்வே ஸ்டேஷன்களையும் கொள்ளையிட்டும் கலகம் பண்ணியும் ஷாங்காய் நகர்நோக்கி வந்து கொண்டிருக்கின்றன.

இப்பட்டணத்தில் தான் ஏராளமான ஐரோப்பிய தேசத்தினருடைய வியாபார ஸ்தலங்களும் கட்டடங்களும் ஜனங்களும் இருந்து வருகிறார்கள். சீனாவின் ஐசுவரியத்துக்கு ஆதாரமான வியாபார ஸ்தலம் இதுவேயாகும். இந்நகரில் வசூலாகும் ஏராளமான வியாபாரத் தீர்வையைக் கைப்பற்றவே இக்கக்ஷியார் முக்கிய யுத்த லக்ஷ்யமாக இருபுறத்தவராலும் கருதப்பட்டிருக்கிறது. இவ்விதம் இருகக்ஷியார் ஓர் பட்டணத்தை நோக்கிச் சண்டை செய்யுங்கால் உள்ளிருக்கும் அந்நிய ஜனங்களாவது அவர்கள் கட்டடங்களாவது சேதப்படாமலிருக்க முடியுமா? அப்படியானால் ஏற்கனவே முன் ஜாக்கிரதையுடனிருக்கும் அந்நியர் சீனாவின் பூமியில் ஓர் வெடிகுண்டும் தீராமலே திரும்பிவிட உத்தேசிப்பார்களா? இதுவே தற்கால வெள்ளையானைப் படலமாயிருந்து வருகிறது.

* * *

இது நிற்க ஜப்பானில் பூகம்பம் ஏற்பட்டு 6000 கிராமங்கள்வரை எரிந்து சாம்பலாகி ஏராளமான பொருள் நஷ்டமும் ஜீவ நஷ்டமும் உண்டாயிருக்கிறது.

* * *

அமெரிக்கா, இங்கிலாந்து, ஜப்பான் ஆகிய மூன்று தேசங்களும் ஒருவருக்கொருவர் போட்டியாய் கப்பற்படையை அதிகரித்துக் கொண்டு போவதைத்தடுக்க ஓர் கான்பரன்ஸ் கூட்ட யோசனை செய்யப் பட்டிருக்கிறது. ஜப்பானியர் சம்மதித்திருக்கின்றனர். பிரான்சும் இத்தாலியும் இது விஷயமாய் சரியான பதில் கூறவில்லையாதலால் சமீபத்தில் ஜெனிவாவில் ஷை விஷயமாய் கூடவிருக்கும் கான்பரன்ஸில் ஷை இரு தேசங்களும் கலந்து கொள்ள முடியாவிட்டாலும் விசிட்டர்களாய் ஆஜராகத் தயாராயிருப்பார்களென்று தெரிகிறது. அமெரிக்கர் இது விஷயமாய் எடுத்துக்கொண்ட முயற்சியும் பிரயாசையும் அமெரிக்காவின் இயற்கையான சமாதானப் பிரியத்திற்கு ஓர் குறிப்பாகும். ஜப்பானியர் ஷை வேண்டுகோளுக் கிணங்கியது அவர்களது பெருந்தன்மைக்கோர் அத்தாக்ஷியாகும். ஆனாலும் மன்னா குடியிருக்க வீடும், மனையும் வேண்டாமா? வியாபாரம் பண்ண சந்தையும் துறைமுகமும் வேண்டாமா? பிள்ளைகளைப்போஷிக்க பணம் சம்பாதிக்க வேண்டாமா? இவ்விதமான திண்டாட்டமும் கவலையும் ஏற்படாவிட்டால் உலகத்தின் தற்கால பலவித பின்னலான நிலைமை மாறி எல்லா தேசங்களும் சமாதானமாயும் பெருந்தன்மையுடனும் வாழ்ந்து வரமுடியுமென்பதற்கு ஜோஸியம் கேட்கத் தேவையில்லை.

* * *

நமது இந்திய சட்டசபை நிர்வாகச் செலவுக்காக ரூபாய் அறுபதினாயிரம் வேண்டி வந்ததை கவர்ன்மெண்டுடன் ஒத்துழைத்தே தீரவேண்டுமென்று போராடி எலெக்ஷன் காலத்தில் தமது உத்தம தோழர்களில் பலரையும் விரோதம் பண்ணிக்கொண்ட ஜெயகரே ரூபாய்ஒன்றாகவும் அவரது சகாவான ஜெல்கார் 6 பைஸ் ஆகவும் காங்கிரஸ் பிரசிடெண்டு 1 பைஸ் ஆகவும் குறைக்கவேண்டுமென்று பிரேரணை கொண்டுவந்து கவர்ன்மெண்டைத் தோற்கடித்தனர். இது விஷயமாய் கவர்ன்மெண்டுடன் ஒத்துழைக்கவேண்டிய அளவு உழைத்தாயிற்றென்றும் கவர்ன்மெண்டுமனம் மாறுதலடைய வில்லையென்றும் ஜெயகர்காரணம் சொல்லியிருக்கிறார். பாம்பே, மத்திய மாகாணம் முதலிய இடங்களிலும் மந்திரிகளுக்குச் சம்பளம் மறுக்கப்பட்டிருக்கிறது. நமது சென்னையிலோ மந்திரிகளுக்கும் மற்றவர்களுக்கும் சம்பளத்துக்குக் குறைவில்லை. நம்மைப்போல் வேறெந்த மாகாணத்தாரும் சீர் திருத்தத்தை சிறப்பாய் நிறைவேற்றி வைக்க முடியாதுதானே.

D. B. S.

## நாடார் மஹாஜன சங்கம், மதுரை.

கனவான்களே!

நம்ஜன சமுகம் முன்னேற்றமடைவதற்கு கல்வியே பிரதானமாகும்.

ஆதலின் ஒவ்வொருவரும் தங்கள் குழந்தைகளைத் தவறாமல் பள்ளிக் கூடங்களுக்கனுப்பி கட்டாயமாகக் கல்வி கற்கும்படி செய்யக் கேட்டுக்கொள்கிறோம்.

காரியதரிசிகள்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

## ஸ்ரீமான் S. A. முத்துநாடாரவர்களின்

# இலங்கை விஜயம்.

## மகாஜனங்களின் பேராதரவு.

### வடக்கன்குளம் (கொழும்பு) நாடார் ஐக்கிய சங்கத்தாரின் வரவேற்பும், ஆதரவும்.

(நமது விசேஷ நிருபரிடமிருந்து.)

"நாடார்குல மித்திரன்" அதிபர் ஸ்ரீமான் எஸ். ஏ. முத்துநாடாரவர்கள் சென்ற மாசிமீ 13உ இலங்கை புறப்படுகிறார்களென்த் தெரியவே, இவ்விடம் பெரியோருக்கும், விசேஷமாக வாலிப சிலர்களுக்கும் அவர்கள் வருகையின் நோக்கத்தை ஆதரிக்கும் மனப்பான்மை அதிசயப்படுவிட்டது. அதற்கேற்ப 27—2—27 ஞாயிற்றுக்கிழமை இவண் விஜயம் செய்வார்கள் எனுங்கருத்துட்கொண்டு வாலிபர் சிலர் கனம் அதிபரவர்களை எதிர் கொண்டழைக்கும் சின்னங்களுடன் அன்று தினமே துறைமுகம் சென்று கனம் அதிபரவர்கள் அன்று வராமையால் திரும்பிவிட்டனர். ஆனால் கனம் அதிபரவர்கள் 3-3-27ல் வந்து சேர்ந்தார்கள். கொழும்பு 1-ம் குறுக்குத்தெரு "இரத்தினவிலாஸ்" நாடார் ஹோட்டலில் தங்கியிருக்கும் நமததிபரவர்களைப் பல குலாபிமானிகள் தினே தினே வந்து சந்தித்து நல்வரவேற்பு உபசாரம்கூறி வந்த நோக்கத்திற்கு ஆதரவுகொடுத்துப் போகின்றனர்.

சிற்க, கனம் அதிபரவர்களும் கொழும்பு நகரிலுள்ள ஒவ்வொரு பெரியோரையும் குலாபிமான வாலிப சிலர்களையும் தனித்தனியே சந்தித்துப் பேசிவந்தனர். கொழும்பு டவுண் புறக்கோட்டை, முகத்துவாரம், சோனகத்தெரு, மசங்கா வீதி, கொள்ளுப்பிட்டி, பம்பிலப்பிட்டி, கும்பெனித்தெரு, வக்ஷால்வீதி முதலிய இடங்களிலுள்ள எல்லா நாடார் பெருமக்களையும் சந்தித்து ஷேமநிதிப் புத்தகங்கள் கொடுத்து வேலை ஜரூராய் நடைபெற்றுவருகிறது. சென்ற விடங்களிலெல்லாம் அதிபரவர்களின் உள்ளக்குறிப்பையும் நோக்கத்தையும் ஜனங்கள் மெச்சி தக்க ஆதரவு கொடுத்து வருகிறார்கள். விசேஷமாக ஸ்ரீமான் டி. ஜி. மணிநாடாரவர்களும், நாடார்மகாஜன சங்கம் மாஜி பிரசாரகர் ஸ்ரீமான் எ. எஸ். கோவிந்பிள்ளைநாடாரவர்களும் அதிபரவர்களுடன் ஒத்துழைத்து ஆங்காங்கு அழைத்துச்சென்று பேருதவி புரிந்து வருகின்றார்கள்.

சிற்க, கனம் அதிபரவர்களுடன் இவண் விஜயம் செய்திருக்கும் நண்பர் கனம் எஸ். எஸ். சர்க்கரைப்பாண்டியரவர்கள் முறையே நண்பர் டேர் என்ற நிலையில் கனம் அதிபரவர்களுக்குக் குறிப்பறிந்து ஒத்துழைப்பது மன்னியில் மகாஜனங்கள் மத்தியில் தம் இனிய அமுதமொழிகளால் நோக்கத்தை எடுத்துரைத்து வருகின்றார்கள்.

12—3—27 சனிக்கிழமை கும்பனித்தெரு, வக்ஷால் வீதியிலுள்ள வடக்கன்குளம் நாடார் ஐக்கிய சங்கத்தாரால் கனம் அதிபரவர்களுக்கு ஓர் வரவேற்பு வைபவம் நடைபெற்றது. ஸ்ரீமான்கள் கொ. மி. தே. வியாகப்ப நாடார், இ. மு. ம. மிக்கேல் அந்தோணிநாடார், சூ. தை. சிலுவைக்ஷத்திரியர், பா. எ. சிலுவைநாடார் ஆகிய குலாபிமான சிலர்களின் முயற்சி பெரிதும் போற்றத்தக்கது. பல பெரியோரும் வாலிப சிலர்களுமாக சுமார் 200 பேர்வரை ஆண்டு குழுமியிருந்தனர். "இரத்தினவிலாஸ்" மானேஜர் டி. முத்துக்கருப்பநாடாரவர்களும் இக்கூட்டத்திற்கு விஜயஞ்செய்து சிறப்பித்தாரென்பது குறிப்பிடத்தக்கது. வாலிப சிலர்களின் பஜனை கீதமும், தேசியகீதமும், மதாபிமான கீதமும் மகிழ்ச்சியைக் கொடுத்தன. கடவுள் வணக்கம் ஆனதும் ஸ்ரீமான் பா. எ. சிலுவைநாடாரவர்களால் பிரேரிக்கப்பட்டு ஸ்ரீமான் ஞா. முத்துநாடாரவர்களால் ஆமோதிக்கப்பட்டு கனம் அதிபரவர்கள் அவைத்தலைமை வகித்தார்கள். ஸ்ரீமான் கொ. மி. தே. வியாகப்பநாடாரவர்களால் தலைவர்களுக்கு புஷ்பஹாரம்சூட்டப்பட்டது. பின்னால் ஷை சங்கம் காரியதரிசி ஸ்ரீமான் இ. மு. ம. மிக்கேலந்தோணி நாடாரவர்களால் ஷை சங்கம் பிரஸிடெண்டு வைஸ் பிரஸிடெண்டு, முறையே ஸ்ரீமான்களான கல்குளை மதலேந்திரநாடாருக்கும், கொ. மி. தே. வியாகப்பநாடாருக்கும் ஆங்கு விஜயம் செய்திருந்த நண்பர்களான எஸ். எஸ். சர்க்கரைப்பாண்டியரவர்களுக்கும் எ. எஸ். கோவிந்பிள்ளை நாடாரவர்களுக்கும் புஷ்பஹாரம் சூட்டப்பட்டது.

விஜயம் செய்திருந்த அன்பர்கள் அனைவர்களுக்கும்ஆசாரப்படியும்மதாச்சாரப்படியும் சந்தனமும், குங்குமப்பிரசாதமும் வழங்கப்பட்டன.

கனம் அதிபரவர்களுக்கு ஷை சங்கம் சார்பாக காரியதரிசியவர்களால் வரவேற்புப்பத்திரம் வாசித்தளிக்கப்பட்டது. தலைவர் முகவுரை கூறியபின் முறையே ஸ்ரீமான்கள் எ. எஸ். கோவிந்பிள்ளைநாடார், எஸ். ஏசுதாஸ்நாடார், எஸ். எஸ். சர்க்கரைப்பாண்டியர், இ. மு. ம. மிக்கேல் அந்தோணிநாடார் இவர்களால் அதிபரவர்களின் இலங்கை விஜயத்தைப்பற்றி வெகு தெளிவாக எடுத்துரைக்கப்பட்டது. தலைவரவர்களும் அதிபரவர்களுமான கனம் எஸ். ஏ. முத்துநாடாரவர்கள் முடிவுரையில் "மித்திரனின்" தோன்றுதலுக்கு காரணத்தையும் தான் பத்திரிகாதிபதியத் தொழிலை ஏற்ற நோக்கத்தையும் தனது நிலையையும் பட்டு வருஷங்களுக்கிடையில் "மித்திரன்" யால் ஏற்பட்ட பல்விதஏற்றத்தாழ்ச்சிகளையும் அதன் காரணங்களையும் இனி தான் செய்ய உத்தேசிக்கும் வேலைகளையும் சமூகசேவையையும் உள்ளதை உள்ளவாறு சொல்லிவரும்போது சபையோர் மனம் கசிந்துருகினது. இடையில் ஏற்பட்ட சில சந்தேகவினாக்களுக்கும் கனம் அதிபரவர்கள் தக்க சமாதானம் உரைத்தனர். அன்னவர்களும் மனதிருப்தியடைந்தார்கள்.

முடிவில் மகாஜனங்களால் "மித்திரன்" க்ஷேமநிதிக்குதக்கஆதரவு எடுத்துக் கொள்ளப்பட்டது. மித்திரனுக்குப் புதிய போஷகப் பிரபுக்களாக ஸ்ரீமான்கள் கொ. மி. தே. வியாகப்பநாடார், இ. மு. இ. மிக்கேல்நாடார், இ. மு. ம. மிக்கேல் அந்தோணிநாடார், பா. எ. சிலுவைநாடார், சூ. தை. சிலுவை க்ஷத்திரியன் ஆகிய குலாபிமான சிலர்கள் சேர்ந்துள்ளார்கள். புதிய சந்தாதார்களாக பலர் சேர்ந்தனர். மேலும் தக்க ஆதரவு கொடுப்பதாக வாக்குறுதி கொடுத்திருக்கிறார்கள். வந்தனோபசாரத்துடன் சபை கலைவுற்றது. இக்கூட்டத்தில் கள்ளிகுளம், காவல்கிணறு மற்றும் ஊர் குலாபிமானிகளும்கலந்து சிறப்பித்தது குறிப்பிடத்தக்கது.

இன்னும் பற்பல சங்கங்களில் ஆதரவில்கனம்அதிபரவர்களுக்குநல்வரவேற்பும் பேராதரவும் ஏற்படும் என்று நம்பப்படுகிறது. மேலும் பல வாலிப சிலர்களும் பெரியோர்களும் சேர்ந்து அடுத்தவாரத்தில் கனம் அதிபரவர்களுடனும், அவர்கள் தம் சகாக்களுடனும் ஓர் போட்டோ எடுக்க உத்தேசித்திருக்கின்றனர். கனம் அதிபரவர்கள் நாளது பங்குனிமீ 15உ அருப்புக்கோட்டையில்நடைபெறும்கூட்டத்திற்கு விஜயம் செய்யவேண்டியுமிருக்கிறது. ஒருக்கால் அவர்கள் திடீரெனப்புறப்பட நேர்ந்தாலும் அவர்கள் நம்மத்தியில் வைத்துவிட்டுப்போகும் வேலையைத்தீவிரமாய் முன்னின்று முடித்து அவர்கள் நோக்கத்தை பூர்த்திசெய்ய வேண்டியது நமது கடமையாகும். அபிமானிகள் இதை ஊன்றிக் கவனிக்க வேண்டுகின்றோம்.

---

## 2வது நிறைவுவிழா.

### கமுதி க்ஷத்திரிய ஆங்கிலோ வெர்னக்குலர் ஸ்கூல் மாணவர் சங்கம்.

10—3—27-ல் மாலை 5 மணிக்கு கமுதி சப்ரிஜிஸ்ட்ரார் மகா-ா-ா-ஸ்ரீ வேம்புஐயர் அவர்கள் அக்கிராசனத்தின் கீழ் மாணவர்களின் ஸ்போர்ட்ஸ் நடத்தப்பட்டது.

மறுநாள் மாலை 5 மணிக்கு இராமநாதபுரம் ஜில்லா கல்விலாக்கா தலைமை அதிகாரி மகா-ா-ா-ஸ்ரீ டி. பி. கிருஷ்ணசாமிமுதலியார் எம். ஏ. பி. எல். அவர்கள் அக்கிராசனத்தின் கீழ் ஒரு கூட்டம் கூடியது. அவ்வமயம் உத்தியோகஸ்தர்களும் நாடார்மஹாஜனங்களும் விஜயம் செய்து ஷை நிறைவு விழாவைச் சிறப்பித்தனர். கடவுள் வணக்கத்திற்குப் பின் ஷை சங்கக் காரியதரிசி மகா-ா-ா-ஸ்ரீ பிரஸிடெண்ட் அவர்களுக்கு வரவேற்பு வந்தனோபசாரப்பத்திரம் வாசித்தளித்தார். சிறிய பிரசங்கங்கள் வியாசம் வாசித்தல் ஒப்புவித்தல் முதலியவைகள் மாணவர்களால் நடைபெற்றன. விஜயஞ்செய்திருந்த கனவான்களில் சிலர் தங்கள் தங்கள் அபிப்பிராயங்களைச் சொன்னார்கள். கனம் பிரஸிடெண்ட் அவர்கள் தங்கள் அபிப்பிராயத்தைச் சொன்னபின் பிள்ளைகளுக்கு வெகுமதி அளித்தார்கள்.

கமுதி ரேஞ்சு ஸ்கூல் டிப்டி இன்ஸ்பெக்டர் மகா-ா-ா-ஸ்ரீ கிருஷ்ண ஐயங்கார் பி. ஏ. எல். டி. அவர்கள் வந்தனோபசாரம்கூறினர். எல்லோருக்கும் தாம்பூலம் அளித்தபிறகு ராஜவாழ்த்துப்பாடி கூட்டம் கலைந்தது.

அன்று இரவு ஷை ஸ்கூல் பாலிய மாணவர்கள் சகுந்தலாஎன்னும் நாடகத்தை வெகு விமரிசையாய் நடத்திக் காண்பித்தார்கள்.

மறுநாள் காலையில் மகா-ா-ா-ஸ்ரீ டி. பி. கிருஷ்ணசாமிமுதலியார் எம். ஏ. பி. எல். அவர்களை கௌரவப்படுத்தும் நிமித்தம் ஷை ஸ்கூல் கமிட்டி மெம்பர்கள் வெகுவிமரிசையாய் ஒரு சிற்றுண்டி விருந்து அளித்தார்கள் என்று ஒரு நிருபர் எழுதுகிறார்.

---

## பரமன்குறிச்சி பாடசாலை.

பொதுஜனங்களின் கல்வியபிவிருத்தியையே பெரிதும் மதித்து ஆரம்பம் செய்யப்பெற்றிருக்கும் பரமன்குறிச்சி க்ஸ்ப்பா எலிமெண்டரி பாடசாலை அதன் நிர்வாகிகளால் மிகவும் மேலான முறையில் நடைபெற்று வருவது சந்தோஷிக்கத்தக்கது. ஷை பள்ளியில் பெண் குழந்தைகளும் வாசிப்பு பெற்றுவருவது குறிப்பிடத்தக்கது. அன்னார்களை கடவுள் ஆசீர்வதிப்பாராகவென்று ஸ்ரீமான்களான வி. வி. எஸ். வெள்ளையாநாடார், கே. டி. சாலமோன்நாடார், வி. வி. எஸ். சாமுவேல்நாடார் எழுதுகிறார்கள்.

---

## நெருப்பு.

பர்மா தேசத்தில் திலகம்போன்று சிறப்பும் செல்வக்கும் அமைந்த தவ்வாய் என்ற ஊரின் மத்தியில் 28—2—27 திங்கட்கிழமை இராத்திரி சுமார் 8½ மணிக்கு ஒரு பெரிய கல் வீட்டில் நெருப்புப் பிடித்து சுற்றியுள்ள சுமார் 500 கட்டடங்கள் நாசமாகின. அதில் பர்மாக்காரர்களுக்கும், சீனர்களுக்கும், இந்தியர்களுக்கும் சொந்தமான கட்டடங்கள் 350, ஏழைகளின் வீடுகள் 150. இவைகளில் நஷ்டமான பொருள்கள் கணக்கிட முடியாது. உயிர்ச்சேதம் கிடையாது என்று ஸ்ரீமான் ராம. தெ. ராமகிருஷ்ணநாடார் எழுதுகிறார்.

---

## கதர் அரசர்வருகிறார்!

### கையால் நூற்று நெய்த கதரை வாங்கி அணியுங்கள்!

---

## பேரையூரில் உபசாரம்.

### ஸ்ரீமான் T. R. கிருஷ்ணசாமி முதலியார்

10—3—27-ல் இராமநாதபுரம் ஜில்லாகல்விலாக்கா தலைமையதிகாரியும்பொதுஜனஅபிவிருத்தியில் சிரத்தையுள்ளவரும்முக்கியமாய்ஏழைகளுக்கிரங்கும் தயாளருமான மகா-ா-ா-ஸ்ரீ டி. ஆர். கிருஷ்ணசாமி முதலியாரவர்கள் பேரையூருக்கு விஜயஞ் செய்திருந்தார்கள். இசைபெற்ற ஷையூர் க்ஷத்திரியகுல பால்யநாடார் கல்வியபிவிர்த்தி சங்கத்தார் முயற்சியால் குலாபிமானிகள் 300 பேர்வரை அன்னார்களை வரவேற்றுபசரித்து சங்கத்திற்கு அழைத்துவந்து உபசாரப்பத்திரமொன்று வாசித்தளிக்கப்பெற்றது. பத்திரத்தில் பேரையூரிலுள்ள கல்விக்குறைவைபற்றி முக்கியமாய் குறிப்பிடப்பட்டிருந்தது.

கனம் முதலியாரவர்கள் பதிலளிக்கும்போது, தம்மை இத்துணைதூரம் கண்ணியப் படுத்தியதற்கு நன்றிபாராட்டுவதாகவும், கல்விக்குறைகளைப்பற்றி விசேஷமாய் கவனிப்பதாகவும், இராமநாதபுரம் ஜில்லாவில் நாடார்ஜனசமூகம் கல்வி விஷயத்தில் எடுத்துவரும் முயற்சியைக்கண்டு தாம் பெரிதும் சந்தோஷமுறுவதாகவும், சிவகாசி, சாத்தூர், விருதுநகர், அருப்புக்கோட்டை முதலிய இடங்களில் தங்கள் சொந்தத்தில் பொதுஜனங்களின் அபிவிருத்தியைக் கருதி ஹைஸ்கூல் ஏற்படுத்தி நடத்திவருவது போற்றத்தகுரிய செயலும், நாடார்கள் கல்விகற்பதிலும், விவசாயம், வியாபாரம், கைத்தொழில் ஆகிய வகைகளிலும் போதுமானபடி முன்னேற்றமடையத் தங்கள் ஆசையை விருத்திசெய்ய வேண்டுமென்றும் குறிப்பிட்டார்கள். பின் சங்கம் காரியதரிசி ஸ்ரீமான் எம். பி. பெரியசாமிநாடார் வந்தனோபசாரம் சொல்ல சபை கலைந்தது என்று ஸ்ரீமான் எம். வி. முனியசாமிநாடார் எழுதுகிறார்.

---

ஸ்ரீமான் மா. வே. ஷண்முகவேல் நாடார் வாசகசாலை, தூத்துக்குடி.

---

## அனுதாபக்கூட்டம்.

இவ்வாசகசாலையின் ஆதரவில் ஓர் அனுதாபக்கூட்டம் வாசகசாலைஹாலில் 14—3—27-ல் ஸ்ரீமான் தே. த. ச. அய்யாபெருமாள்நாடார் அவர்கள் தலைமையின் கீழ்கூடி கீழ்கண்ட தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கிறது என்று காரியதரிசிகள் எழுதுகிறார்கள்,

"குளத்தூர் மகா-ா-ா-ஸ்ரீ மு. மு. வெ. முத்தையநாடார் அவர்கள் குமாரனும் மகா-ா-ா-ஸ்ரீ மா. வயி. வயிரவநாடார் அவர்கள் மருமகனும், சமீபத்தில் நடைபெற்ற ஐ. சி. எஸ். தேர்ச்சிப் பரீட்சை எழுதிவருமாகிய மகா-ா-ா-ஸ்ரீ இராஜவெற்றிவேல் நாடார் பி. ஏ. அவர்கள் 13-3-27-ல் தனது 22-வது அதிபால்யவயதில் அகாலமரணமடைந்ததைக் குறித்து இந்த வாசகசாலையின் அங்கத்தினர்கள் தங்கள் ஆழ்ந்த துக்கத்தைத் தெரிவித்துக்கொள்வதுடன், அன்னாரின் குடும்பத்தினருக்கு எல்லாம்வல்ல இறைவன் ஆறுதலளிப்பாராக."

---

## உடனே தேவை.

தமிழ் ஜில்லாக்களிலும் கொழும்பு, பினாங்கு, சிங்கப்பூர் பர்மா, இரங்கூன்முதலிய வெளி தேசங்களிலும் நமக்கு ஏஜெண்டுகள் தேவை. ஜேயமில்லாவிடில் பணம் வாபீஸ் என்ற கண்டிஷன் பேரில் நாம் விற்பனை செய்கிறோம். மற்ற விவரங்களுக்கு ஒரு அணா ஸ்டாம்பு வைத்து எழுதவும்:—

ஆர். சேஷன், எடிட்டர்
ஸ்ரீரங்கம், (திருச்சி.)

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

# அதிஷ்டம்! அதிஷ்டம்!! முந்துங்கள்!!!

அருப்புக்கோட்டை

"நாடார்குல மித்திரன்" க்ஷேம நிதி

தர்மப்பண்டு லாட்டரிச் சீட்டு.

மொத்தம் சீட்டுகள் 33000. சீட்டு 1-க்கு ரூ 1.



## முதல் பிரைஸ் ரூ 3000.

1927-ஹு மே மீ 4 உ க்கு பிரபவ ஹு
சித்திரை மீ 22 உ பிரைஸ் எடுக்கக்கூடும்.

### 1-வது பிரைஸ் ரூ 3000.

2-வது பிரைஸ் ரூ 1500
3-வது பிரைஸ் ரூ 1000
4-வது பிரைஸ் ரூ 500
200 ரூ-ல் 2-க்கு ரூ 400
100 ரூ-ல் 5-க்குரூ 500
50 ரூ-ல் 20-க்கு ரூ 1000
20 ரூ-ல் 50-க்குரூ 1000
10 ரூ-ல் 100-க்குரூ 1000
5 ரூ-ல் 200-க்குரூ 1000
8 ரூ-ல் 600-க்கு ரூ 1800
2 ரூ-ல் 2400-க்குரூ 4800

ஆக பிரைஸ்கள் 3381-க்கு ரூ 17500
புக் 1500-க்குக் கமிஷன் ரூ 3000
குமஸ்தா சம்பளம், அச்சுக்கூலி, விசேஷக் கமிஷன் வகையறாக்கள் ரூ 1800
தனிப் பிரைஸ் ரூ 1700
பண்டுக்கு ரூ 9000

ஆக ரூ 33000

குறித்த காலத்தில் பிரைஸ் எடுக்கக் கூடும்.

1-வது பிரைஸ் முதல் 6வதுபிரைஸ்வரைவிழுந்தபுள்ளிகளிடமிருந்து முறையே 150, 75, 50, 25, 10, 10 ரூபாய் அந்தந்தச் சீட்டுவிற்றவர்களுக்குக் கமிஷன் பிடித்துக் கொடுக்கப்பெறும்.

சகலவிதமான கடிதப் போக்குவரத்தும் சூ. ஆ. முத்து நாடார், "நாடார் குல மித்திரன்" பத்திராதிபர், அருப்புக்கோட்டை என்ற விலாசத்துக்கு அனுப்ப வேண்டும்.

இங்ஙனம்,
சூ. ஆ. முத்து நாடார்,
"நாடார் குல மித்திரன்" பத்திராதிபர்.
சொ. ஆ. சொக்கலிங்கபாண்டியர்,
உப பத்திராதிபர், அருப்புக்கோட்டை

## மகாத்மா காந்தியின் நீதவுரை.

மகாத்மாகாந்தி அவர்கள் தன்மேல் அத்தியந்தப் பிரீதியற்றிருப்பதாகக் கொண்டு தற்போதைய பிரயாணத்தில் ஆங்காங்குள்ள ஜனங்கள் இயற்றிவரும் உபசார வழிகளைப்பற்றிக்கூறும் போது பின் வருமாறு அறிவுறுத்துகிறார்:—

மாபெருங்கூட்டங்களில் அமைதி நிலவுவது பெரும்பாலும் சாத்தியமிராது. அதுசமயம் சொற்ப எண்ணிக்கையுள்ள பிரசுரங்களை ஜனங்களின் மத்தியில் விநியோகிப்பதானது, சந்தடியை உண்டாக்கத் தூண்டுவதாகும்.

* •

ஜனங்கள் அனைவருக்கும் போதுமான பிரதிகளை தயார்செய்து சொல்பத்திரயத்திற்கு, கூட்டம் கூடுவதற்கு முன்னரே விற்பனைசெய்து விடுவது நலமாகும்.

* •

காலத்தை அனுசரித்து சிக்கனமாக நடக்கவேண்டும். நம்மைவிட்டுபொதுப் பணத்திலிருந்து செலவிடப்பெறும் ஒவ்வொரு பைசாவும் பயன் தருவதாயிருக்கவேண்டும். ஜனங்களைத் திரட்ட கொடி அத்தியாவசியமாயின் சட்டைகள் தைத்ததில் மிகுந்த துண்டுத் துணிகளைக்கொண்டு கொடி தயார் செய்து கொள்ளுங்கள்.

* *

வரவேற்புக்கு, நூல்கள் பின்னால் பயன் தருமாறுள்ள முறையில் ஆக்கப் பெற்ற கதர்மாலை போதுமானது. அச்சிட்ட உபசாரப் பத்திரங்கள் தேவையின்று. கதர் துணியில் எழுதுவதை சித்தரிப்பது கலையழகு கொடுப்பதாகும். உபசாரப் பத்திரத்திற்கு இவ்வகை முறை மேலானது.

* •

வெள்ளிதங்கப் பேழைகள் எனக்குப் பொருத்தமற்றது. கிடைக்கும் அவைகளை நான் அதிக விலைக்கு உடனே விற்று தேசபந்து நிதியில் சேர்த்துவிடுகிறேன். இதனால் வரவமிருப்பினும் காரியம் முறையானதாகா.

• •

எனது பிரயாணம் சந்தோஷத்தோடு கூடியதல்ல. தேவைக்கதிகமான மோட்டார் செலவுகூடாது. உணவு விஷயத்திற்கு அதிகப்பணமும் காலமும்செலவு செய்வது வியர்த்தமே. காமோ பட்டினிக்காளாயிருக்கும் லட்சக்கணக்கான ஜனங்களுக்கு ஊழியம் செய்பவர்கள்.

* *

என்னுடைய இயக்கத்திற் கல்லாது எனது சொந்த சௌகரியத்திற்காகச் செய்யப்படும் எதுவும் எனது கட்புக் குரியதாகாது. என்மேல் அன்பு பாராட்டுவதாகவுமிராது. எனக்கு பிரமிப்பைக்காட்டி நிமையை விளைப்பதாகவே கருதுவேன்.

• *

என்னைத் திருப்திப்படுத்தவதென்றால் என் உயிர் நிலைத்திருக்க விரும்புவீர்கள். அப்படியானால் எனது உயிரினும் பெரிதாகவும் யான் உயிர் வாழ்தற்கு ஆதிகாரணமாயுமுள்ள கதர் விஷயத்திற்கு ஒவ்வொருவரும் முதன்மையில் பண உதவி புரிதல்வேண்டுவதவசியமன்றோ!

• *

கிடைக்குதவ எங்கள் ஊர் எழ்மைப் பட்டதென்று சொல்பவர்கள் உபசரிப்பில் எவ்வளவுதூரம் தரத்திற்கு மீறியதில்லாமலிருக்க வேண்டுமென்பதை கவனிக்கவேண்டும். அவ்விதமின்றி நடந்தால் கண்டிக்க எனக்குரிமையுண்டு.

* *

பஞ்சத்திலடிபட்ட நாடாயினும் செல்வர்களுக்கு திரவியம் குவியாது போகவில்லை. ஆகையால் செல்வவான்களும் நகரவாசிகளும் ஏழைகள் பிணி தீர்க்கவும் கிராமவாசிகளுக்கு வேலை கொடுக்கவும் ஏதுகரமாக பண உதவி செய்வதை இது சமயம் மறந்து போகக்கூடாது.

* *

இக்நிலைமையில் மலர்மாலையும் வெள்ளி தங்கப் பேழைகளும்எவ்வாறு பொருந்தும்? அனைத்தும் எனக்குத் தகாதன. நம்மைப்போலவே செடிகளுக்கும் உயிருண்டென்று கம்புகிறவனாதலால் அநாவசியமாக ஓரே ஒரு பூவைக்கிள்ளுதலையும் நான் விரும்பவில்லை.

* •

இதனால் அத்தகைய ஆடம்பர செய்கையும் சாமான்களும் எனக்குத் தேவையின்றும். பின்னும் எனது அரிய எச்சரிக்கையை கவனியாது போயின் ஏழைகளின் நிதிக்கே அவ்வகை பரிசளிக்கப்பட்டதாகக் கருதி ஏலம் போட்டுவிட வேண்டிவரும்.

---

உங்கள் வீட்டில் எந்த சமயங்களிலும் சேவிக்க இனிமையான பல சங்கீதப் பாட்டுக் கச்சேரி இனி நடை பெறும்.
100 ரூபாய் பெறும்படியான பெரிய கிராமபோன் (Gramaphone) போலவே பாடக் கூடிய அளவில் செய்யப்பட்ட

## மினியேச்சர் கிராமபோன்.

ஜெர்மன் தேசத்தில் ஓர் தொழிற்சாலையில் மாத்திரம் தயாரிக்கப்பட்டது. லண்டன் நகர் வர்த்தகர்களுக்கும், குடும்பஸ்தர்க்கும் ஆயிரக் கணக்காய் செலவிடப்பட்டது. தற்சமயம் எங்களால் ஜெர்மன் தொழிற்சாலையிலிருந்தே தருவிக்கப்பட்டது. பாட்டுகளை சப்திக்கும் இயந்திரங்களுடன் பார்வைக்கு அழகாயும், பற்பல அதிசயங்களுடனும் பாட்டுகள் பாடக் கூடியது. சயிஸ் 6"–6"; பிளேட் 5½;" உயரம் 4" உள்ள கிராமபோன் பெட்டி 1-ம், பல தினுசு பாடும் டபிள் சயிட் ரிகார்டு 1-ம், ஊசிகள் பாக்கட் 1-ம்,



செட் 1-க்கு விலை ரூ 8—8—0. தனி டபிள் சயிட் ரிகார்டு (தட்டு) 1-க்கு ரூ 1. ஊசிகள் பாக்கட் 1-க்கு அணா 4. தபால் சார்ஜ் பிரத்தியேகம். வி. பி. அனுப்ப முடியாத வெளிநாடுகளுக்கு பூராத் தொகையையும் முன் பணமாக அனுப்ப வேண்டும். பாகிங் போஸ்டேஜ் ரூ 1—6—0.

விலாசம்:—
ஓவர்சீஸ் சுவிஸ் வாட்சு கம்பெனி,
மவுண்ட் ரோடு, மதராஸ்.

---

## அநேக நற்சாக்ஷி பத்திரங்கள் பெற்றிருக்கிறோம்.

# ஜோதிடம்.

ஒரு வருஷபலன்! ரூபாய் ஒன்றுதான்.

உங்களுடைய எதிர்காலபலனை அறிந்துகொள்ள விரும்புகின்றீர்களா? அப்படியானால்உங்களுடைய ஜெனனகட்சத்திரம் அல்லது பெயரும் எழுதி அனுப்பினால் தற்சமயம் நடக்கும் 12 மாத பலன்கள் அதாவது:—உத்தியோகம், வியாபாரம், புத்திர சந்தானம், யோகம், விவாகப் பொருத்தம் முதலிய பலாபலன்களை எழுதி அனுப்பப்படும்.

சிற்றின்புசாஸ்த்திரம் என்னும் புத்தகம் 1-க்கு விலை அணா 8. எமது விலாசம்:—

"ஜோதிடசாலை"
என்னூர்,
செங்கல்பட்டு ஜில்லா.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection